




VIRAKESARI

# வீரகேசரி

THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA

Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk

பிராந்திய,நகரப்பதிப்பு








மலர் : 92 இதழ்: 94 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 09 ஆம் திகதி வியாழக்கிழமை (25.11.2021) ஹிஜ்ரி 1443 ர.ஆகிர் 19 விலை :ரூ.30 பக்கங்கள் : 20


## புதிய பிறழ்வுகள் அபாயம் மிக்கவை

### அச்சுறுத்தலில் 8 மாவட்டங்கள்; தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

(எம்.மனோசித்ரா)

வைரஸ் தொற்று பரவல் ஏற்படும் போது, பிரதான வைரஸிலிருந்து உப பிறழ்வுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. இவ்வாறு உருவாகும் பிறழ்வுகள் பிரதான வைரஸை விடவும் அபாயம் மிக்கதாகக் காணப்படும். எனவே சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி எமது பாதுகாப்பை 10

# மோசமடையும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம்

### நினைவுகூரலுக்கான மறுப்பு, சிறுபான்மையினரை ஓரங்கட்டும் செயற்பாடுகள் தொடர்வதாக பிரிட்டன் தெரிவிப்பு

(நா.தனுஜா)

இவ்வருடத்தின் முதல் ஆறுமாதகாலப்பகுதியில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மிகமோசமடைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள பிரிட்டன், வடக்கு,கிழக்கு மாகாணங்களில் நினைவுகூரல் நிகழ்வுகளை நடத்துவதற்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்படல் உள்ளடங்கலாக சிறுபான்மையினரை ஓரங்கட்டும் வகையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன்மாதம் வரையான முதல் அரையாண்டில் மனித உரிமைகள் நிலைவரம் மிகுந்த கரிசனைக்குரிய மட்டத்திலிருக்கும் நாடுகளை உள்ளடக்கியதாக பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள 10



இலங்கையில் முதற்தடவையாக உயர் தொழில்நுட்ப கேபிள்கள் மேல் அமைக்கப்பட்ட கல்யாணி பொன் நுழைவு (Golden Gate Kalyani) என பெயரிடப்பட்டுள்ள புதிய களனி பாலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் நேற்று திறந்து வைக்கப்பட்டபோது...

## தேசிய தலைவர் பிரபாகரன் கஜேந்திரனின் கூற்றால் சர்ச்சை

### சபையில் ஆளுந்தரப்பு கொந்தளிப்பு; சபையை வழிநடத்திய வேலுகுமார் எம்.பி. மீதும் சீறிப்பாய்ந்தனர்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தேசிய தலைவரென புகழ்ந்து உரையாற்றிய கஜேந்திரன் எம்.பி.யின் கருத்துக்களினால் சபையில் ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கொந்தளித்து சீறிப்பாய்ந்ததுடன் சபையை வழிநடத்திக் கொண்டிருந்த வேலுகுமார் எம்.பி.யுடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். 10

கிண்ணியா படகுப்பாதை விபத்து சம்பவம்

## படகு உரிமையாளர் உட்பட மூவர் கைது

(எம்.மனோசித்ரா)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பொலிஸ் பிரிவு குறிஞ்சாக்கேணி களப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை படகுப்பாதை கவிழ்ந்து சிறுவர்கள் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக 11

## பட்ஜட்டுக்கு ஆதரவு வழங்கிய மு.கா. எம்.பி.க்கள் மூவர் இடைநிறுத்தம்

### ஹக்கீம் அறிவிப்பு

பாராளுமன்றத்தில் வரவு – செலவு திட்ட வாக்கெடுப்பின் போது, கட்சியின் உச்ச பீடத்தின் தீர்மானத்துக்கமைவாக செயற்படாததனால்,பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசிம், ஹாபிஸ் நஸீர் அஹ்மட் ஆகிய மூவரும் கட்சியில் அவர்கள் வகித்து வரும் பதவிகளிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், கட்சியின் தீர்மானத்தைப் புறக்கணித்து நடந்ததற்காக அவர்களிடம் விளக்கம் கோரப்படவுள்ளதாகவும் 10

## இரசாயன உரத்தினை தனியார் துறை இறக்குமதி செய்யலாம்

### வர்த்தமானியை ரத்து செய்து அரசாங்கம் அறிவிப்பு

(எம்.மனோசித்ரா)

அரசாங்கத்தின் பசுமை விவசாய கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. நாட்டில் தற்போது காணப்படுகின்ற உரத்தட்டுப்பாட்டினை கருத்திற் கொண்டு தனியார் துறையினருக்கு இரசாயன உரத்தினை இறக்குமதி செய்வதற்கு 10

## ஜேர்மன் தூதுவருடன் ரெலோ குழுவினர் சந்திப்பு

### பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராய்வு



ஜேர்மனியின் தூதுவர் ஹோல்கர் ஸுபேர்ட், உதவி தூதுவர் ஓலாப் மல்ஷோ ஆகியோருடனான அரசியல் 08

## மாகாணசபை தேர்தலுக்கு அச்சமடையும் அரசாங்கம்

**நல்லாட்சி அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்திருக்காவிட்டால் அரச ஊழியர்கள் பிச்சை எடுக்க வேண்டிய நிலை நேர்ந்திருக்கும் என்கிறது எதிர்க்கட்சி**

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

மாகாணசபை தேர்தலுக்கு செல்ல அரசாங்கம் பயப்படுகின்றது. மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துவதாக தெரிவித்தே ஆட்சிக்கு வந்த அரசாங்கம், 2 வருடங்களாகியும் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 10

## நிரந்தர சமாதானத்தை அடைந்துகொள்வதில் தமிழ் மக்களுடன் அமெரிக்கா துணைநிற்கும்

### சுமந்திரன் குழுவினரிடம் அமெரிக்க இராஜாங்க உதவி செயலர் எடுத்துரைப்பு

(நா.தனுஜா)



இலங்கையுடனான தமது வெளியுறவுக்கொள்கையின் அடிப்படையாக மனித உரிமைகளே காணப்படுவதாகவும் நிரந்தர சமாதானத்தை அடைந்துகொள்வதற்கான தேடலில் தமிழ் மக்களுக்கான ஆதரவை வழங்கத்தயாராக 10

## சமையல் எரிவாயுவில் கலப்படம் வெடிக்கும் நிலையில் சிலிண்டர்கள்

### முஜிபுர் ரஹ்மான் சபையில் எச்சரிக்கை

வீடுகளில் பாவிக்கும் சமையல் எரிவாயுவில் இருக்க வேண்டிய அளவில் மாற்றம் செய்துள்ளதால் அது வெடிக்கும் அபாயம் இருப்பதாக நுகர்வோர் விவகார நடவடிக்கைகள் அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் 08






## தலையில் மகுடத்தை அணிந்தால் போதாது

**மக்களின் துன்பத்தை தீர்க்க வேண்டும் — பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை**

(எம்.மனோசித்ரா)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளையேனும் நடைமுறைப்படுத்துமாறு உரிய தரப்பினரிடம் பல 10

## நகரசபை தலைவரே கிண்ணியா படகு விபத்துக்கு பிரதான காரணம்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்துக்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டியவர் எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் மைத்துனரான கிண்ணியாநகரசபைதலைவரும்,படகுப்பாதை சேவையை நடத்தியது 08

**படகுப்பாதை சேவையை சட்டவிரோதமாக முன்னெடுக்க அவரே அனுமதித்துள்ளார் என்கிறார் இராஜாங்க அமைச்சர் லான்ஸா**




### புதிய சட்டம் உருவாக்கி

# மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துவோம்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் தெரிவிப்பு

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

நாட்டின் தற்போதுள்ள சட்டத்திற்கிணங்க மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. அதனால் புதிய சட்டம் ஒன்றை உருவாக்கி மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தின் போது மாகாணசபை தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தலுக்கு செல்ல அரசாங்கம் பயப்படுகின்றது. மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துவதாக தெரிவித்தே ஆட்சிக்கு வந்த அரசாங்கம், 2வருடமாகியும் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் எம்மை குறைகூறி வருகின்றது. மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு சபைக்கு சமர்ப்பித்தால் அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலையும் 2வருடங்களுக்கு பிற்போட நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் உண்மை நிலை என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்றார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு பதிலளித்தார். அவர் தொடர்ந்து தெரி விக்கையில், நடைமுறை சட்டத்திற்கிணங்க மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மாகாணசபை தேர்தலை நடத்த புதிய சட்டம் இயற்றுமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. எமது முன்னாள் ஜனாதிபதியும் அது தொடர்பில் நீதிமன்றம் சென்றிருந்தார். அந்தவகையில் புதிய சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு நாங்கள் இரண்டு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளோம்.

அதற்கிணங்க புதிய சட்டம் ஒன்றை உருவாக்கி மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். உங்களது காலத்தில் நீங்கள் செய்த தவறை நாங்கள் நிவர்த்தி செய்வோம் என்றார்.

# அனுமதியின்றியே படகுசேவை முன்னெடுப்பு

## சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்; அரசாங்கம் அறிவிப்பு

(எம்.மனோசித்ரா)

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் படகு விபத்து இடம்பெற்ற களப்பில் பயணிப்பதற்கு கிண்ணியா நகரசபை மற்றும் பிரதேச சபையிடம் அனுமதி கோரப்பட்டிருந்த போதிலும், அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கு பதிலாக பிரத்தியேக செலவில் மூன்றரை கிலோ மீற்றருக்கு மாற்று பாதை அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வித உத்தியோகபூர்வ அனுமதியும் இன்றியே இந்த படகு பயணித்துள்ளது. எனவே இதில் சட்ட ரீதியான பிரச்சினைகளும் காணப்படுகின்றன. அதற்கமைய சட்டத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பர் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்ற போது அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இவ்வார அமைச்சரவை கூட்டத்தில் கிண்ணியா சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ தனது கவலையை வெளியிட்டதோடு, அது குறித்த பின்னணியையும் கேட்டறிந்துகொண்டார். நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அது தொடர்பில் ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தினார்.

இந்த பகுதியில் இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சாவினால் அடிக்கல் நாட்டப்பட்டதையடுத்து, நிர்மாணப்பணிகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறிருப்பினும் மூன்றரை கிலோ மீற்றரில் இதற்கான தற்காலிக மாற்று பாதையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேசசபையின் குறித்த படகு பாதைக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. எனினும் அனுமதி மறுக்கப்பட்டு, அதற்கான கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக பிரத்தியேக செலவில் மாற்று பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய எவ்வித உத்தியோகபூர்வ அனுமதியும் இன்றியே குறித்த படகு இயங்கியுள்ளது.

எனவே இதில் சட்டரீதியான பிரச்சினைகளும் காணப்படுகின்றன. அதற்கமைய சட்டத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பர். இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் இழப்பீடு வழங்கப்படும். இழப்பீடு வழங்குவதால் உயிரின் பெறுமதியை மதிப்பிட முடியாது என்றபோதிலும், அதனை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும். எவ்வாறிருப்பினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எம்மால் வழங்கப்படக் கூடிய உயர்ந்தபட்ச நியாயம் இந்த பாலத்தை துரிதமாக நிர்மாணித்துக் கொடுப்பதாகும் என்றார்.

# பதவி விலக போவதில்லை

## நீக்கப்பட்டதாக கூறப்பட்ட பீடைக்கொல்லி பதிவாளர் தெரிவிப்பு

(இராஜதுரை ஹஷான்)

க்ளைபோசெட் உள்ளிட்ட 5 கிருமி நாசினிகள் மீதான தடைநீக்கம் தொடர்பிலான வர்த்தமானி பீடைக்கொல்லி தொழில்நுட்ப குழு மற்றும் ஆலோசனை சபையினதும், அமைச்சரவையினதும் ஆலோசனைக்கு அமைய வெளியிடப்பட்டது. இவ்விடயத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் ஏதும் இடம்பெறவில்லை. ஆகவே தான் பதவி விலகப் போவதில்லை என பீடைக்கொல்லி பதிவாளர் கலாநிதி ஜே.ஏ.சுமித் தெரிவித்துள்ளார்.

க்ளைபோசெட் உள்ளிட்ட 5 பீடைக்கொல்லிகள் பாவனை மற்றும் வியாபாரம் மீது 2014ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட தடையை நீக்கும் வகையில் பீடைக்கொல்லிகள் பதிவாளர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

பீடைக்கொல்லி பதிவாளர் வெளியிட்ட வர்த்தமானி அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணானது. ஆகவே அந்த வர்த்தமானி வலுவற்றதுடன் அவரை பதவி நீக்கி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

க்ளைபோசெட் உள்ளிட்ட பீடைகொல்லிகள் இறப்பர் மற்றும் தேயிலை பயிர்ச்செய்கைகளுக்கு பாவிப்பது தடை செய்யப்பட்டது. அத்தடை 2018 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் நீக்கப்பட்டது.

க்ளைபோசெட் உள்ளிட்ட 5 பீடைக்கொல்லிகள் மீதான தடைநீக்கத்திற்கான தீர்மானம் பீடைக்கொல்லி தொழில் நுட்ப குழு மற்றும் ஆலோசனை சபை, கடந்த காலங்களில் வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இதனை சட்டவிரோத செயற்பாடு என குறிப்பிட முடியாது.

பீடைக்கொல்லி பதிவாளர் பதவியில் இருந்து விலக முடியாது. அமைச்சரது தீர்மானத்திற்கு எதிராக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என பதிவாளர் ஜே.ஏ சுமித் குறிப்பிடுள்ளார்.

# இந்திய திரவ நனோ நைட்ரஜன் உரம் 2.5 டொலரால் குறைப்பு

## விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த

(எம்.மனோசித்ரா)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திரவ நனோ நைட்ரஜன் உரத்தின் ஒரு லீற்றருக்கான விலை 2.5 டொலரால் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஒட்டு மொத்த உர இறக்குமதிக்கான விலை 5.2 மில்லியன் டொலர்களால் குறைவடைந்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சீன உர இறக்குமதியில் ஏற்பட்ட சிக்கலால் எமக்கு காணப்பட்ட ஒரேயொரு மாற்று வழி இந்தியாவிலிருந்து திரவ உரத்தை இறக்குமதி செய்வதேயாகும். இதற்காக விசேட தொழில்நுட்ப குழுக்கள் அமைக்கப்பட்டு, அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் முதற்கட்ட உரம் இறக்குமதி செய்யப்பட்ட போது, அதில் விலை குறித்த சிக்கல் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டது. இது தொடர்பில் நான் தனிப்பட்ட ரீதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவிடம் கலந்துரையாடினேன். அதனையடுத்து இறக்குமதியாளர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்டு, நிதி அமைச்சின் செயலாளர், இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக் ஷ ஆகியோரால் குறித்த உரத்தின் விலை குறைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய ஒரு லீற்றர் திரவ உரத்தின் விலையை 2.5 டொலர்களால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மூலம் ஒட்டுமொத்த இறக்குமதி விலை 5.2 மில்லியன் டொலர்களால் குறைவடைந்துள்ளது. அமைச்சின் விலைமனு கோரல் குழுவினாலேயே இவ்அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினால் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

### எட்டு அமைச்சுக்களின் செயலாளர்களின் நியமனத்துக்கு

# பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி

(சபை நிருபர்கள்)

எட்டு அமைச்சுக்களின் செயலாளர்களின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மத்தியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமல் குணரத்னவும் உள்ளடங்குகின்றார்.

அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சின் செயலாளராக டபிள்யூ.எச்.கருணாரத்னவையும், திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளராக திருமதி டி.என்.லியனகேவையும் கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.எல்.பி.ஆர்.அபேரத்னவையும்நியமிப்பதற்கு உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், தளபாடங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக எம்.ஏ.பி.வி. பண்டாரநாயக்கவையும் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக திருமதி.கே.ஏ.டி.ஆர். நிஷாந்தி ஜயசிங்கவையும் நியமிப்பதற்கு இங்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராக எம்.என்.ரணசிங்கவை நியமிப்பதற்கும், கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பி.ஏ.ஐ.சிறிநிமல் பெரேராவை நியமிப்பதற்கு உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

உயர் பதவிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான சமல் ராஜபக் ஷ, சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, டக்ளஸ் தேவானந்தா, பந்துல குணவர்த்தன, உதய கம்மன்பில, இராஜாங்க அமைச்சர்களான விதுர விக்கிரமநாயக்க, வைத்திய கலாநிதி சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே, பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, ஜோன் செனவிரத்ன, தலதா அத்துகோரள மற்றும் தருமலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சாதாரணதர மாணவர்களுக்கு டிசம்பரில் நடைமுறைப்பரீட்சை

(எம்.மனோசித்ரா)

டிசம்பர் முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மாணவர்களுக்கான நடைமுறைப்பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. இது தொடர்பில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எவ்வாறிருப்பினும் செயன்முறை பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடாவிட்டால், மாணவர்களுக்கு உயர்தரத்திற்கு செல்வதில் சிக்கல் ஏற்படும் என்று கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் என்பன தெரிவித்துள்ளன. அத்தோடு ஏதேனுமொரு வகையில் மீண்டுமொரு கொவிட் அலை ஏற்பட்டால் இந்த பரீட்சைகள் மேலும் கால தாமதமடையக் கூடும் என்பதோடு, முழுமையான பெறுபேறு வெளியிடப்படாமையின் காரணமாக இம்மாணவர்கள் உயர்தரத்தை தொடர்வதிலும் சிக்கல் ஏற்படும். கடந்த காலங்களில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையால் நடைமுறை பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் போதுமானதல்ல என்பதை கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சருக்கு அறிவிக்கப்படும் என்றார்.

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு தயாராகும் தேர்தல்கள் ஆணைக்குழு

(இராஜதுரை ஹஷான்)

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்காக அரசியலமைப்பு ரீதியிலான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட, பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கு அறிவிக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் கூட்டத்தில் அத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது செயற்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் காலம் 2022ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதியுடன் நிறைவுபெறும். உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலம் நிறைவு பெற்ற தினத்திலிருந்து மேலும் ஒரு வருட காலத்திற்கு தேர்தலை பிற்போடும் அதிகாரம் விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு உண்டு. உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்திற்கமைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலம் நிறைவு பெறுவதற்கு முன் 06 மாத காலத்திற்கு முன்னர் தேர்தலை நடத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சருக்கு விடயதானத்திற்குரிய பொறுப்புகளுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலத்தை மட்டுப்படுத்தவும், நீடிக்கவும் அதிகாரம் காணப்படுகிறது.அதற்கமைய உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலத்தை நீடிக்காவிடின் பதவி காலம் நிறைவுபெறும் தினத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை நடத்துவதற்கு தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கான முதற்கட்ட பணிகளுக்குரிய படிவங்களை தயார் செய்தல்,அலுவலர்களுக்கு தேவையான வாகனங்கள் மற்றும் இதர வசதிகள் குறித்து ஆய்வு செய்தல், வாக்குச்சாவடிகளை ஆய்வு செய்தல் மற்றும் நடைமுறையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற சபை தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு எந்நிலையிலும் தயாராகவுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதில் எவ்வித சட்ட சிக்கலும் கிடையாது. மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த அரசாங்கம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதா என்ற சந்தேகம் காணப்படுகிறது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறை, விருப்புமுறை ஆகியன பற்றிய மக்களின் நம்பகத்தன்மை பெருமளவிற்கு குறைவடைந்துள்ளது. அத்தேர்தல் முறைமைகள் தேர்தல் செலவுகளை அதிகரிப்பதுடன், கட்சிக்குள்ளும், கட்சிகளுக்கிடையிலும், வேட்பாளர்களுக்கிடையிலும் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன ஆகவே கலப்பு விகிதாசர பிரதிநித்துவ முறைமை மிகச்சிறந்த தேர்தல் முறையாக கருதப்படுகிறது என தேர்தல் முறைமை தொடர்பிலான பாராளுமன்ற தெரிவு குழுவிற்கு யோசனை முன்வைத்துள்ளார்.

# சங்கிலியன் பூங்கா நிகழ்வு குறித்து தவறான பரப்புரை

## யாழ்.இந்திய கொன்ஸியூலர் காரியாலயம் தகவல்

(எம்.மனோசித்ரா)

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்ற நிகழ்வு தொடர்பில் தவறான ஊடக அறிக்கைகள் வெளியாகியுள்ளன. கொன்ஸியூலர் ஜெனரலுக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமையால் இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுடனோ உத்தியோகபூர்வ நிகழ்வுக்கு அப்பால் அவர்களின் செயற்பாடுகளுடனோ எந்தவிதத்திலும் இணைத்துப்பார்க்க முடியாது என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய கொன்ஸியூலர் ஜெனரல் காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட கொன்ஸியூலர் ஜெனரல் விடுதலைப் புலிகளுக்கு மரியாதை செலுத்தியதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் இது தொடர்பில் விளக்கமளித்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய கொன்ஸியூலர் ஜெனரல் காரியாலயம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய கொன்ஸியூலர் ஜெனரல் கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற பசுமைக் கண்காட்சி ஒன்றின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு மரக்கன்றுகளை வழங்கியமை தொடர்பாக தவறான ஊடக அறிக்கைகள் வெளியாகியுள்ளதை நாம் காண்கின்றோம்.

அழைப்பின் பிரகாரமே அவர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார், மேலும் அவருக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாதமையால் இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுடனோ உத்தியோகபூர்வ நிகழ்வுக்கு அப்பால் அவர்களின் செயற்பாடுகளுடனோ எந்த விதத்திலும் இணைத்துப்பார்க்க முடியாது என்றுள்ளது.

# சுபயோகம்

**25.11.2021 பிலவ வருடம் கார்த்திகை மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை**

கிருஷ்ணபட்ச சஷ்டி திதி பின்னிரவு 12.47 வரை. அதன்மேல் ஸப்தமி திதி. பூசம் நட்சத்திரம் 3.00 மணிவரை. அதன்மேல் ஆயில்யம் நட்சத்திரம். மரணயோகம் மாலை வரை. சிராத்த திதி மேய்பிறை சஷ்டி. மேல்நோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் பூராடம், உத்திராடம். சுபநேரங்கள் காலை 9.00 –10.30, மாலை 3.30 –4.30, ராகுகாலம் 1.30– 3.00, எமகண்டம் 6.00 – 7.30, குளிகை காலம் 9.00 –10.30, வாரசூலம் தெற்கு, பரிகாரம் தைலம்.

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சந் |
| குரு | தினசரி கிரகநிலை கார்த்திகை 09 வியாழன் | | |
| சனி | | | |
| சுக் | சூரி, புத, கேது | செவ் | |

| | |
|---|---|
| மேடம் | – பணம், பரிசு |
| இடபம் | – யோகம், அதிர்ஷ்டம் |
| மிதுனம் | – உயர்வு, மேன்மை |
| கடகம் | – புகழ், செல்வாக்கு |
| சிம்மம் | – தனம், சம்பத்து |
| கன்னி | – நோய், மருத்துவம் |
| துலாம் | – அன்பு, இரக்கம் |
| விருச்சிகம் | – சங்கடம், தொல்லை |
| தனுசு | – பக்தி, ஆசி |
| மகரம் | – புகழ், செல்வாக்கு |
| கும்பம் | – விரக்தி, வேதனை |
| மீனம் | – கீர்த்தி, செல்வாக்கு |

இன்று பூசம் நட்சத்திரம். வியாழக்கிழமை குரு பகவானை வழிபடல் நன்று. கேது, புதன் கிரகங்களின் ஆதிக்க நாளின்று

அதிர்ஷ்ட எண்கள் –1, 5, 2
பொருந்தா எண்கள் –7, 8
அதிர்ஷ்ட வர்ணங்கள் – மஞ்சள், வெளிர்நீலம்

**இராமரத்தினம் ஜோதி**
**(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)**

# அதிபர், ஆசிரியர் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(எம்.மனோசித்ரா)

அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியதற்கான தேவை உணரப்பட்டுள்ளது. அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு வழங்கப்பட்டுள்ளதே தவிர, அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை நிதி அமைச்சர் பாராளுமன்றத்திலும் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் கடந்த 2006 ஆம் ஆண்டு அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. தற்போது 15 ஆண்டுகள் கடந்துள்ளன. எனவேதான் அதற்கான தேவை தற்போது எழுந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் அதிபர், ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. மாறாக 24 ஆண்டுகளாகக் காணப்படும் சம்பள முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும் போது சிறந்த முடிவு கிடைக்கப் பெறும் என்றார்.


நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி (NDB) யின், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் உள்ள மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள ஆபரணங்கள்

**ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்**

கீழுள்ள கிளைகளில் உள்ள அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் ஏலத்தில் விற்கப்படும்.
(ஏல விற்பனை காலை 10 மணி தொடக்கம் நடைபெறும்)

| நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.யின் கிளைகள் | குறித்த திகதி வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் மீட்கப்படவில்லை | ஏல விற்பனை நடைபெறும் இடம் மற்றும் திகதி |
|---|---|---|
| அகுரஸ்ஸ<br>அழுத்கம<br>அம்பலாந்தோட்டை<br>அனுராதபுரம்<br>மட்டக்களப்பு<br>சிலாபம்<br>திகன<br>எல்பிட்டிய<br>எம்பிலிபிட்டிய<br>காலி<br>ஹந்தலை<br>யாழ்ப்பாணம்<br>கடுவெல<br>கொச்சிக்கடை<br>மஹாவேவா<br>மாத்தளை<br>மதுகம<br>நாரம்மல<br>நாவலப்பிட்டி<br>புத்தளம்<br>இரத்தினபுர<br>திருநெல்வேலி<br>உரகஸ்மன்ஹந்திய<br>வத்தளை<br>வெள்ளவத்தை<br>வென்னப்புவ | 31.03.2020 | **கொட்டாஞ்சேனை கிளை**<br>295, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.<br>11 மற்றும் 12 டிசம்பர் 2021 |

மேலே கூறப்பட்ட ஏல விற்பனைகளை நிறுத்தவோ, தாமதிக்கவோ அல்லது இவற்றில் மாற்றங்கள் செய்யவோ நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி. யிற்கு உரிமை உண்டு.
முகாமையாளர் - நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.
40, நவம் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை. தொ.பே.: 0112 448 448

011 244 8888 www.ndbbank.com

NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி


# மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினார் மனோ கணேசன் எம்.பி.

கொவிட் தொற்றினால் சுகவீனமுற்று சுமார் பத்து நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட எம்.பி.யுமான மனோ கணேசன் பூரண சுகம் பெற்ற நிலையில் நேற்று வீடு திரும்பியுள்ளார்.

ஊடகங்களுக்கு இது குறித்து கருத்து கூறிய அவர், சுகவீனமுற்ற வேளையில் எனக்கு ஆறுதல்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்து, மத வழிபாடுகளிலும் ஈடுபட்டு அன்பையும், நம்பிக்கையையும் நேரடியாகவும், ஊடகங்கள், தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் தெரிவித்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன் என்று கூறினார்.


**வாகனங்கள் விற்பனைக்கு**
பதிவு செய்யப்பட்ட வாகனங்கள்

**லொறி**

| | | |
|---|---|---|
| NW PU-XXXX | மஹிந்திரா MAXXIMO 909.00 CC | 2012 |
| CP PU-XXXX | மஹிந்திரா MAXXIMO 909.00 CC | 2012 |

**முச்சக்கரவண்டிகள்**

| | | |
|---|---|---|
| CP YA-XXXX | பஜாஜ் AR4S-UG 173.50 CC | 2010 |
| CP AAK-XXXX | பஜாஜ் RE 205 198.75 CC | 2013 |
| NW QK-XXXX | பஜாஜ் AUTO AR4S 173.00 CC | 2007 |
| NW QH-XXXX | பஜாஜ் AUTO RE 2 S 145.00 CC | 2006 |
| SG QM-XXXX | பஜாஜ் AUTO AR4S 173.00 CC | 2007 |
| SG YG-XXXX | பியாஜியோ APE CITY 395.00 CC | 2010 |
| NW QN-XXXX | பஜாஜ் AUTO AR4S 173.00 CC | 2007 |
| WP QX-XXXX | பஜாஜ் AR4S-UG 173.50 CC | 2010 |
| CP YB-XXXX | பஜாஜ் AR4S-UG 173.50 CC | 2010 |
| CP YH-XXXX | பஜாஜ் RE 205 198.75 CC | 2010 |
| WP QZ-XXXX | பஜாஜ் RE 205 198.75 CC | 2010 |

மு.ப 8.30 மணியிலிருந்து பி.ப 5.00 மணி வரை வாகனங்களை பார்வையிடலாம்

விசாரணைக்கு - 0768578119, 0766851575, 0775260124

குருநாகலை ஹொடோ ஃபெயார்,
இல. 156/B, கொழும்பு வீதி, வதுரங்கல, குருநாகலை.

கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பிஎல்சி



**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2022**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரித்தல் அத்துடன் சேவைகளை வழங்குதல்**

2022 ஆண்டு காலப்பகுதியில் ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு அத்துடன் சேவைகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்வதற்கு ஆர்வமுள்ள கீர்த்திமிக்க தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களது ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏனைய வியாபார தாபனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி - 2021 திசெம்பர் 10

விண்ணப்பப்படிவத்தினை https://www.cbsl.gov.lk/en/tenders என்ற இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்

**செயலாளர்**
**இலங்கை மத்திய வங்கி**



Visit: www.abansgroup.com

BLACK FRIDAY SALE

நவம்பர் 26 முதல் 28 வரை

56% வரை தள்ளுபடி

48 மாதங்கள் வரை வட்டி இல்லை.

நாடளாவிய அபான்ஸ் கிளைகள் மற்றும் BUYABANS மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

BUY ONLINE
Abans.com

0115 999 000

HNB Credit cards · SampathCards · Nations TrustBank · COMMERCIAL BANK · HSBC · BOC · PEOPLE'S BANK · standard chartered · SEYLAN BANK · DFCC BANK · LOLC FINANCE · PAN ASIA BANK

Abans

## இன்றைய சிந்தனை

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்.**
(திருக்குறள்)

**நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.**

VIRAKESARI
வீரகேசரி
2021 நவம்பர் 25ஆம் திகதி வியாழக்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிட்டெட்,
267, ரஜ மாவத்தை, ஏக்கல, ஜா–எல. Tel. : 011 7322750, 011 7322751,
011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# அதிகாரிகளின் அசமந்தபோக்கை காட்டும் கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு பாதை விபத்து

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி களப்பில் படகுப்பாதை கவிழ்ந்ததில் 4 மாணவர்கள் உட்பட 6 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சம்பவம் கடும் கவலையையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலம் 2020 ஆம் ஆண்டு உடைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இந்த படகுப்பாதை மூலம் களப்பு ஊடாகவே போக்குவரத்து இடம்பெற்று வந்தது. இந்தப் படகுப்பாதையைப் பயன்படுத்தியே பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்றுவந்ததுடன் கிராமமக்களும் இந்தப் பாதையை பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில்தான் படகுப்பாதையில் மாணவர்களும் கிராம மக்களும் சம்பவ தினம் பயணித்தபோது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

நாட்டில் பல்வேறு பகுதிகளையும் இணைக்கும் வகையில் பல ஆயிரம் கோடி ரூபாவில் அதிவேக பாதைகள், உயர் மட்டத்திலான வீதிகள், பல நூறு கோடி ரூபா செலவில் மேம்பாலங்கள் அமைக்கப்பட்டு கொண்டிருக்கின்ற சூழலில் போக்குவரத்துக்கு தகுதியற்ற படகுப் பயணங்களை மேற்கொண்டு விபத்துகள் இடம்பெறுகின்ற சம்பவங்கள் நாட்டில் பதிவாகின்றமை மிகவும் கவலைக்குரியதாக காணப்படுகின்றன.

நேற்றைய தினம் கொழும்பு களனி புதிய பாலமானது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. பல கோடி ரூபா செலவில் நவீன முறைகளைப் பின்பற்றி இந்த பாலம் அமைக்கப்பட்டு இருக்கின்றது. இது கொழும்பு நகரின் அபிவிருத்தியில் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அதுமட்டுமன்றி கட்டுநாயக்க கொழும்பு அதிவேக பாதை, கொழும்பு தெற்கு அதிவேகப் பாதை மற்றும் கொழும்பு கண்டி அதிவேக பாதை என நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வாறு மிகவும் நவீனமான முறையில் அதிவேகப் பாதைகள், பாலங்கள், மேம்பாலங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனினும் நாட்டின் பல பகுதிகளில் இவ்வாறு ஒரு பாலம் கூட அமைக்கப்படாமல் அல்லது பாலங்கள் மிக அத்தியாவசியமான நிலையில் காணப்படுகின்ற இடங்களில் தேவையான பாலங்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றமை மிகவும் துரதிஷ்டவசமானதாக காணப்படுகின்றது. இது தொடர்பாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றிருந்தன. கிழக்கு மாகாணத்தின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பாக கடுமையான விமர்சனத்தை வெளியிட்டிருந்தனர். அதற்கு அரசாங்க தரப்பிலும் பதில் அளிக்கப்பட்டது. நேற்றைய தினம் இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சர் நிமால் லான்சா எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீதும் குற்றம் சுமத்தி கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்தார். அதாவது கிண்ணியா பிரதேச சபை தமது எல்லைக்கு அப்பால் சென்று தகுதியற்ற இந்த படகு சேவைக்கு அனுமதி அளித்திருப்பதாகவும் அதனூடாகவே இந்த விபத்து நிகழ்ந்திருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இந்த இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவே கடந்த ஏப்ரல் மாதம் கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார். இந்தநிலையில் தற்போது குறித்த படகின் உரிமையாளர் மற்றும் அதனை இயக்கிய இருவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தீர்மானம் எடுக்கும் நிலையில் இருக்கின்ற அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இந்த விபத்து இடம் பெற்றிருக்கிறது. இதனால் அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்பட்டு இருக்கின்றன. பாடசாலை மாணவர்கள் இந்த விபத்தில் உயிரிழந்திருக்கின்றனர். இவ்வாறானதொரு நிலைமை மிகவும் துரதிஷ்டமானது என்பதுடன் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இந்த பாலம் அமைக்கப்பட வேண்டியது அத்தியாவசிய தேவையாக காணப்பட்டும் கூட இது தொடர்பாக துரிதகதியில் செயற்படாத அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்த விடயத்தில் யார் அசமந்தமாக செயல்பட்டு இருந்தாலும்கூட அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் பின்னர் இவ்வாறானதொரு சம்பவம் எங்கும் இடம்பெறாத வகையில் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த பிரதேச சபை நிர்வாகத்தினர் இது தொடர்பாக தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதேபோன்று இந்த பாலம் அமைக்கும் விடயத்தில் அசமந்தப் போக்கு காணப்பட்டால் அது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் இது தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவாக இதற்கு ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். அந்த பகுதியில் பாலம் அமைக்கும் வரை ஒரு மேலதிக வீதி ஒன்று உருவாக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அது சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் மக்கள் அந்த வீதியை பயன்படுத்தாமல் இந்த படகு சேவையை பயன்படுத்தி வந்துள்ளனர். எப்படியிருப்பினும் மக்கள் பக்கத்தில் இருந்து இந்த விடயத்தில் சிந்திக்கவேண்டும். குறித்த பாதையை பயன்படுத்துவதில் மக்களுக்கு சிரமங்கள் இருக்கும் என்றால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அபிவிருத்தி என்பது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகவும் இருக்க வேண்டும். மிகப் பெரிய கட்டடங்களையும் வீதிகளையும் பாலங்களையும் அமைப்பது எவ்வளவு முக்கியமாக இருக்கிறதோ அதேபோன்று பின்தங்கிய பகுதிகளில் அத்தியாவசிய தேவையாக இருக்கின்ற இந்த பாலங்கள் மற்றும் வீதிகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு பயன் பெறக்கூடிய வகையிலே நிலைமை உருவாக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் விரைவாக அரசாங்கம் இந்த பாலத்தை நிர்மாணித்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த ஏப்ரல் மாதம் இந்த பாலத்தை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு இருந்தது. எனினும் இன்னும் அந்த பணிகள் முடியவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். பாலம் அமைக்கப்படும் போது அதுவும் மிக நீண்ட பாலங்களை அமைக்கும் போது அதற்கான நிர்மாணப்பணிகள் திட்டமிட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். ஆனாலும் மக்களின் அவசர தேவை, அவர்களின் அத்தியாவசியத் தேவை, அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே பாலம் நிர்மாணிக்கப்படும்வரை போக்குவரத்துக்கு தகுதியான சகல நிர்வாக தரப்பினரதும் அனுமதியுடன் கூடிய வகையில் மாற்று ஏற்பாடு ஒன்றை முன்னெடுக்கலாம். அது மிகவும் பாதுகாப்பாக அமைய வேண்டியது மிக முக்கியமாக இருக்கிறது.

இந்த தகுதியற்ற படகுப்பாதை விபத்தின்போது அதில் பயணித்தவர்களுக்கு எந்தவிதமான ஒரு பாதுகாப்பு அங்கி கூட வழங்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனூடாக எந்தளவு தூரம் இந்த விடயத்தில் அசமந்தமான போக்கு காணப்படுகின்றது என்பது தெரிகின்றது. இதன் பின்னர் இதுபோன்ற ஒரு சம்பவம் இடம்பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

அதேபோன்று இந்த விடயத்தில் தமது அதிகார எல்லையை மீறி தகுதியற்ற இந்த படகுப்பாதை சேவைக்கு அனுமதி அளித்த தரப்பினர் தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுத்து பாலத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் அதுவரை போக்குவரத்துக்கு தகுதியான பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மாற்று ஏற்பாட்டை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பது இன்றியமையாதது என்பதனை வலியுறுத்துகின்றோம்.

# உலக வங்கியின் அபிவிருத்தி (கல்வி) அறிக்கை (2018) – ஒரு விமர்சனம்

உலக வங்கியின் கடந்த 40 ஆண்டுகால வரலாற்றில் (1978 – 2018) வெளியிடப்பட்ட உலக அபிவிருத்தி அறிக்கைகளில், 2018 ஆம் ஆண்டில் தான் முதன்முறையாகக் கல்வி பற்றிய ஒரு அறிக்கை வெளிவந்துள்ளது. கல்வி ஆர்வலர்கள் பலரும் இதனை வரவேற்றுள்ளனர். இதற்குக் காரணம் இன்று சகல உலக நாடுகளும் கல்வித்துறையில் பல சவால்களை சந்தித்துள்ளமையாகும். ஆயினும் இவ்வறிக்கை சிறப்பானது என்று கூறுவதற்கில்லை. பல நல்ல அம்சங்கள் இருந்தபோதிலும் இவ்வறிக்கையானது, உலக வங்கியின் நீண்டகால குறுகிய கல்விச் சித்தாந்தத்தையே பிரதிபலிக்கின்றது. பொருளியலாளர் கூட ஏற்றுக்கொள்ளாத கல்விச் சித்தாந்தத்தைக் கொண்டது உலக வங்கி என்பது விமர்சகர்கள் கருத்து.

2018 ஆம் ஆண்டின் உலக வங்கியின் ஆண்டறிக்கையின் தலைப்பு ‘கல்வியின் வாக்குறுதியை நிறைவு செய்வதற்கான கற்றல்’ (‘Learning To Realize Education Promise’) என்பதாகும்.

216 பக்க அறிக்கையில் ஒரு எளிமையான செய்தி ஒன்றுண்டு.

·அடிப்படை ஆரம்பக் கல்வியை முடித்த மாணவர்களில் பல இலட்சக்கணக்கானவர்கள் எழுத்தறிவு அற்றவர்கள்.

·14% மாணவர்களே வாசிப்பில் குறைந்த தேர்ச்சியைக் கொண்டவர்கள் கணிதத் தேர்ச்சி அதை விடக் குறைவு.

இவ்வறிக்கையானது கல்வி நெருக்கடிக்கான காரணங்களை ஆராய்ந்து, சில தீர்வுகளையும் வழங்கியுள்ளது அவையாவன:

மாணவர்களின் தேர்ச்சியை விரிவான முறையில் மதிப்பிடல்.

சான்றுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அவையூடாகக் கற்றலை மேம்படுத்தல்.

கல்வி வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் அரசியல், தொழில்நுட்பக் காரணிகளை அகற்றுதல்.

### கல்வி வாய்ப்பில் அக்கறையின்மை

உலகளாவிய ரீதியில், கல்வித் துறையில் இரு பிரதான பிரச்சினைகள் உண்டு. முதலாவது, கல்வி வாய்ப்புக்கள், நியாயத்தன்மை தொடர்பானது. இரண்டாவது, கற்றல், அதன் பண்புத்தரம் தொடர்பானது. “அனைவருக்கும் தரமான கல்வி” என அதனைச் சுருக்கிக் கூறலாம். உலக வங்கியின் மீதான பிரதான முறைப்பாடு, இவ்விரு பிரச்சினைகளையும் உலக வங்கி ஒருங்கே கருத்திற் கொள்வதில்லை என்பதாகும். நடைமுறையில், கல்வி வாய்ப்புக்கள் அதிகரிக்கும் போது, கல்வித்தராதரம் குறைகின்றது; கல்வித் தராதரத்தை அதிகம் கவனிக்கும் போது, கல்வி வாய்ப்புகளை விரிவு செய்யும் விடயம் கவனிக்கப்படுவதில்லை. எவ்வாறாயினும் வாய்ப்பும் பண்புத்தரமும் நெருங்கிய தொடர்புடையவை.

உலக வங்கியில் இவ்வறிக்கை (2018) யானது, ‘வாய்ப்புகள்’ தொடர்பான பிரச்சினையில் அதிக அக்கறை செலுத்தவில்லை. 260 மில்லியன் பாடசாலை செல்லாத விடயம், மிகச் சுருக்கமாகவே கூறப்படுகின்றது. அவர்களுக்கு எவ்வாறு கல்வி வாய்ப்புகளை வழங்கலாம் என்ற விடயம் அறிக்கையில் விரிவாக ஆராயப்படவில்லை. இன்றைய ‘கற்றல் நெருக்கடி’ காரணமாக, அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இந்த 250 மில்லியன் பிள்ளைகளே!

‘கல்வி’ பற்றிய இந்த அறிக்கையில் கருத்துக்களும் மிகவும் குறுகியவை. வாசிப்பு மற்றும் கணிதபாடத் தேர்ச்சிகளே கல்வி என்ற கருத்துக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பல விடயங்களில் சமூக – மனவெழுச்சித் திறன்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், கற்றலை மேம்படுத்துவது பற்றிய ஒரு பரந்த சிந்தனையை அறிக்கையில் காண முடியவில்லை. அறிக்கையில் பயனுள்ள பல ஆய்வு முடிவுகள் எடுத்துக்கூறப்பட்டாலும், அவை வாசிப்பு, கணிதம் தொடர்பானவை மட்டுமே!

### ஆசிரியக் கல்வி

ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் தொடர்பாகப் பல நல்ல கருத்துக்கள் அறிக்கையில் உண்டு. எனினும், அறிக்கையின் ஒரு அடிப்படைக் கருத்து, கற்றல் நெருக்கடிக்குப் பிரதான காரணம், ஊக்கமற்ற, பயிற்சியற்ற ஆசிரியர்களே என்பது அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் கல்வி போதுமானதல்ல என்பது ஒரு உலகளாவிய பிரச்சினை. இப்பிரச்சினைக்கு உலக வங்கியும் உடந்தையாக இருந்து வந்துள்ளது.

சில காலமாகவே, உலக வங்கியானது, ஆசிரியர்களின் முன் சேவை மற்றும் சேவைக்காலப் பயிற்சி முறைகள் என விமர்சித்து வந்துள்ளது.

சில காலமாக, உலக வங்கியானது, பயிற்சியற்ற, ஒப்பற்ற ஆசிரியர்களை அமர்த்துவதைப் பரிந்துரைத்துள்ளது. இதனால் ஆசிரியர் தொழிற்சங்கங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்பது உலக வங்கியின் நம்பிக்கை. இவ்வாறான ஏற்பாடு மலிவானது என்பது உலக வங்கியின் கருத்து.

ஆனால், வேறு சந்தர்ப்பங்களில் உலக வங்கியானது ஒரு முரண்பட்ட பரிந்துரையையும் வழங்கியுள்ளது. அதாவது வளர்முக நாடுகள் ஆசிரியர் கல்வி விடயத்தில் செல்வந்த நாடுகளைப் பின்பற்றி, ஆற்றல் மிக்கவர்களை ஆசிரியர் பணியில் அமர்த்த வேண்டும். அவர்களுக்குச் சிறந்த வேலைச் சூழலை உருவாக்க வேண்டும் என்ற உலக வங்கியின் பரிந்துரை முரண்பட்டதாக அமைகின்றது.

ஆனால் உலக வங்கி எப்போதுமே ஆசிரியர்களின் ஊக்கமின்மை, பாடசாலைக்கு வரவின்மை பற்றிக் குற்றம் சாட்டி வந்துள்ளது. அவர்களைக் கட்டுப்படுத்தல், கண்காணித்தல் என்பன உலக வங்கியின் பரிந்துரைகள், பாடசாலைக் கல்வியின் தோல்விக்கும் வீழ்ச்சிக்கும் ஆசிரியர்களையும் தொழிற்சங்கங்களையும் குறைகூறுவது உலக வங்கியின் வழமை. இவ்வறிக்கை எங்கும் ஆசிரியர்



**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**
**(துணை வேந்தர், ஈ–சொப்ட் வளாகம்)**

வரவின்மை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இதற்குப் பிரதான காரணம் ஆசிரியர்களின் ஊக்கமின்மை என்பது உலக வங்கியின் கருத்து. இக்கருத்தை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வளர்முக நாடுகளில், பல இன்னல்களுக்கிடையில், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவே அவர்கள் கூறுகின்றனர். ஆசிரியர்கள் வரவின்மை ஊக்கமின்மையின் விளைவு அல்ல. அவர்களுடைய அந்தஸ்தும் சம்பளங்களும் பரிதாபகரமான முறையில் குறைந்தவை. இதனால், ஆசிரியர் பணியானது, கடைசியாக விரும்பப்படும் நிலை உண்டு. இதற்கு உலக வங்கியும் உடந்தையாக இருந்து வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் (IMF) நீண்ட காலமாகவே நவதாராளவாத, வாஷிங்டன் இணக்கக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றன. அதனால் அரசாங்கச் செலவுகள் குறைக்கப்பட்டு, ஆசிரியர் சம்பளங்களும் வீழ்ச்சி கண்டன. இது வளர்முக நாடுகளுக்கான ஒரு பொது விதி (இலங்கை உட்பட). உலக வங்கியின் பொருளியல் நிபுணர்கள் சம்பளச் சீர்கேடே ஆசிரியர்களின் வரவின்மைக்குப் பிரதான காரணம் என ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டன. உலக வங்கியின் ஆசிரியர் ‘செயலாற்றத்துக்கேற்ற சம்பளம்’ என்ற கொள்கை ஆசிரியர்களை அவமானப்படுத்துவது என்ற கண்டனமும் உண்டு.

### கல்விநிதி

உலக வங்கியின் அறிக்கையில் கல்வித்துறை நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்ள எவ்வாறு நிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது பற்றிய ஆலோசனைகள் பொதுவாக இல்லை. இவ்விடயம் பற்றி ஓரிரு பக்கங்களில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. அதிகம் செலவழிப்பதா அல்லது நல்லமுறையில் செலவழிப்பதா என்ற கேள்விகளை அறிக்கை எழுப்புகின்றது. அதிகமாக செலவழித்தால் கற்றல் அதிகரிக்கும் எனக்கூற முடியாது என்பது வங்கியின் கருத்து.

மறுபுறம் இவ்வறிக்கையானது கல்வித்தராதரத்தை மேம்படுத்தப் பல செலவுமிக்க ஆலோசனைகளை வழங்கியுள்ளது. பிறந்த பிள்ளைகளின் பராமரிப்பு, சத்துணவு, பெற்றோருக்கு உதவி வழங்கல், முன்பள்ளிக் கல்வி, நூல்நிலையங்களையும் பொழுதுபோக்கு மையங்களையும் அமைத்தல் இரசாயனப் பாங்கான, ஆபத்தான சுற்றாடலை அகற்றுதல், ஆற்றல் மிக்கவர்களை ஆசிரியர் பணிக்கு ஈர்த்தல், ஆசிரியர் பயிற்சிச் சீர்திருத்தங்கள், தொழில்நுட்பப் பயன்பாடு, பாடசாலை முகாமைத்துவ மேம்பாடு என இவையாவும் உலக வங்கியின் ‘செலவு மிக்க’ பரிந்துரைகள். இப்பரிந்துரைகள் மிகவும் செலவு மிக்கவை என அறிக்கையில் எங்குமே கூறப்படவில்லை. 250 மில்லியன் பிள்ளைகளை மீண்டும் பாடசாலைக்கு வரச்செய்ய ஏற்படும் செலவு பற்றி உலக வங்கி எதுவும் கூறவில்லை.

### கல்வி பெறும் உரிமை

இந்த அறிக்கையானது, பிள்ளைகளின் கல்வி உரிமையை வெகு அரிதாகவே கருத்திற் கொண்டது.கல்வி நெருக்கடியை எதிர்கொள்ள ஐ.நா. கூறிய கல்வி வாய்ப்புகள், ஏற்றுக்கொள்ளக்கூடிய கல்வி, கிடைக்கத்தக்க கல்வி, ஏற்புடைய கல்வி (Accessible, Available, Acceptable and Adaptable Education – UN) நான்கு ‘ஏ’க்களை அறிக்கை பயன்படுத்தாது ஒரு முக்கிய குறைபாடாகும்.

ஒரு நாட்டில் ஒரு விடயம் பற்றி செய்யப்பட்ட ஒரே ஆய்வு முழு உலகுக்கும் பொருந்தும் என்ற முறையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வியை விட ஆரம்பக் கல்வியும் இடைநிலைக் கல்வியுமே முதலீட்டுக்குச் சிறந்தவை என்ற கருத்தை உலக வங்கி எப்போதுமே வலியுறுத்தி வந்தது. இவ்வறிக்கையிலும் காணப்படும் சிந்தனை இதுவேயாகும்.

வியட்னாம், கியூபா ஆகிய இரு சோஷலிஸ நாடுகளின் உயர்ந்த கல்வித்தராதரங்கள், பரீட்சைப் புள்ளிகளை அறிக்கை கருத்திற் கொள்ளவில்லை. ஆனால், இந்நாடுகளில் இவ்வறிக்கை பரிந்துரைத்தபடியான உயர்ந்த கல்வி முதலீடுகளைக் கொண்டது.

உலக வங்கி தனது கருத்துக்கள் ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை என்று கூறுகின்றது. ஆனால் அதன் முடிவுகள் ஆய்வுகளையன்றி அதன் ‘சித்தாந்தத்தை’ அடிப்படையாகக் கொண்டவை. தனது சித்தாந்தத்துக்கு ஏற்ற ஆய்வு முடிவுகளைப் பாராட்டுகின்றது. பயன்படுத்துகின்றது.

### உலக வங்கியின் கல்விப் பணிக்குத் தடை

உலக வங்கியின் கல்விச் சிந்தனைகள் நவதாராளவாத பொருளாதாரக் கொள்கையின் செல்வாக்கினால், ‘கல்வி பொது நன்மைக்கானது’ என்ற கொள்கை கைவிடப்பட்டது. ‘கல்வி விற்பனைக்குரிய பண்டம்’ என்ற நிலை உருவாகிவிட்டது. அத்துடன் வேறு பல காரணங்களால் உலக வங்கியின் கல்விப் பணிகள் தடை செய்யப்படல் வேண்டும் என்ற கண்டனக் குரல்கள் எழுந்த வண்ணம் உள்ளன. உலக வங்கியின் சிந்தனைகள் இலவசக் கல்வியைக் கட்டணம் அறவிடும் கல்வியாக்கி விட்டது என்ற முறைப்பாடு உண்டு.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் 90 ஆண்டுகளுக்கு முன்னர், பிள்ளைகளுக்குக் கட்டாய, இலவசக் கல்வியைச் சட்டபூர்வமாக்கியது. ஆனால் உலக வங்கியின் கல்விச் சித்தாந்தம் இக்கொள்கையைத் தவிர்த்து விட்டது. நைகர், மௌரிட்டானியா ஆகிய நாடுகள் உலக வங்கியிடமிருந்து கடன்களைப் பெற விதிக்கப்பட்ட நிபந்தனை, கட்டணம் அறவிடும் தனியார் பாடசாலைகளுக்கான அரசாங்க அனுமதியாகும்.

கல்விக்கான நிதிப்பொறுப்பு அரசாங்கத்திடமிருந்து குடும்பங்களுக்கு மாற்றப்பட, உலக வங்கி காரணமாயிற்று. இதனால் வறிய பிள்ளைகளுக்குக் கல்வியினால் கிடைக்கும் தகுதிகளும் சமூக மயமாக்கமும் இல்லாது போயிற்று.

உலக வங்கி கட்டாயக் கல்வி என்ற சொல்லைக் கைவிட்டு கட்டணமற்ற கல்வி (Fee–Free) என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றது. ஆயினும் பெற்றோரின் நிதிப்பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவி, உகண்டா, தான்சான்யா, கென்யா ஆகிய நாடுகளில் உலக வங்கியின் ஏற்பாட்டில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர் சம்பளச் செலவைக் குறைக்க, உண்மையான ஆசிரியர்களுக்குப் பதிலாக ஒப்பந்தஆசிரியர்கள்நியமிக்கப்படுகின்றனர் (பெனின், இந்தியா, பர்ச்சினோபாசோ ஆகிய நாடுகள் உதாரணம்).

ஆரம்பக் கல்வியை விரிவுபடுத்தி வறுமையைக் குறைக்கலாம். சமூக இணக்கத்தை ஏற்படுத்தலாம் என்ற உலக வங்கியின் கொள்கையை நம்ப எவரும் ஆயத்தமாக இல்லை.

மனித உரிமைகளை மீறும் அரசாங்கத் தலைவர்கள் – சர்வாதிகாரிகள் இராணுவச் செலவை அதிகரிக்கின்றனர்.ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு உலக வங்கியின் கடன்களை நாடுகின்றனர் (உதாரணங்கள் சீனாவும் எதியோப்பியாவும்).


இதனால் உலக வங்கியின் கடன் பொறுப்பு அடுத்த தலைமுறைக்கு மாற்றப்படுகின்றது.

இந்தோனேசியாவிலும் ருவாண்டாவிலும் ஆட்சி செய்த சர்வாதிகாரிகளுக்கு உலக வங்கியின் கடன்கள் உதவின. இவர்களால் பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகள், அக்கடன்களைச் செலுத்த வேண்டியதாயிற்று.

## பொன் மொழி

**கடவுள் மீது தன் முழுக்கவனத்தையும் செலுத்துபவன் வாழ்வில் துன்பத்தில் இருந்து விடுபடுவான்.**

–ஷீரடி சாய் பாபா


ஆச்சர்யமான கழிவுகளுடன் பண்டிகையை அனுபவித்திடுங்கள்
up to 60% off on People's Credit Cards
Apply Today
உல்லாசம்
55%
Sennya Resorts (Belihuloya) டிசம்பர் 31 வரை 0773138844
Seerock The King's Domain (Sigiriya) டிசம்பர் 31 வரை 0664545242 / 0768274726
60%
Deer Park (Giritale) டிசம்பர் 31 வரை 0772020212 0277777777
Tea Plant (Nuwara Eliya) டிசம்பர் 31 வரை 0772020212 0772304477
Oga Reach (Tissamaharama) டிசம்பர் 31 வரை 0472238961 0711513603 Credit : 60% Debit : 60%
up to 60%
Amaara Forest Hotel (Sigiriya) டிசம்பர் 31 வரை 0770038311 0662277277 Credit : Up to 60% Debit : Up to 60%
50%
Giman Free டிசம்பர் 31 வரை 0719474536 0653649999
Kingdom Secret டிசம்பர் 31 வரை 0719474536 0653649999
Amaloh Beach Boutique Resort (Matara) டிசம்பர் 20 வரை 0768248282 (Further discount of LKR 1,000/- for the 2nd night)
Madukelle Tea & Eco Lodge (Kandy) நவம்பர் 30 வரை 0718735810 (Stay 3 nights and more 20% off for last night)
Amaara Sky Hotel (Kandy) டிசம்பர் 31 வரை 0774778315 0812239888 Credit : Up to 60% Debit : Up to 60%
Apa Villa (Thalpe) டிசம்பர் 31 வரை 0779 594545 0113663699 Credit : 50% Debit : 50%
Era Beach (Thalpe) டிசம்பர் 31 வரை 0779 594545 0113663699 Credit : 50% Debit : 50%
Joe's Resort (Unawatuna) டிசம்பர் 31 வரை 0779 594545 0113663699 Credit : 50% Debit : 50%
Sooriya Resort & Spa (Tangalle) டிசம்பர் 31 வரை 076 948 4434 076 348 4431 076 348 4439
Elephas Resort (Sigiriya) டிசம்பர் 31 வரை 076 315 7330 066 205 4111 066 205 4112
up to 50%
Royal Hills (Nuwara Eliya) டிசம்பர் 31 வரை 0771106327 0522224219 Credit : Up to 50% Debit : Up to 50%
up to 55%
Arie Lagoon (Negombo) டிசம்பர் 31 வரை 0317745745 0114327818
40%
The Rain Tree Hotel (Tissamaharama) டிசம்பர் 31 வரை 0472238125/0715597641
Lavendish Wild Safari (Wasgamuwa) டிசம்பர் 31 வரை 0753941941
Lavendish Miridiya Lake Resort (Anuradhapura) டிசம்பர் 31 வரை 0753555921 (Valid only for Weekdays, except Friday and Saturday)
Aarya Lagoon (Kalpitiya) டிசம்பர் 31 வரை 0777509000
Amagi Aria (Negombo) டிசம்பர் 20 வரை 0703569175
Amagi Beach (Marawila) டிசம்பர் 20 வரை 0703569175
Cassandra Culture Resort (Sigiriya) டிசம்பர் 15 வரை 0664933636 Credit : 40% Debit : 40%
45%
Koggala Beach Hotel டிசம்பர் 20 வரை 0711543236 0711555805 0912283243
up to 15%
Redwood Falcon Cabins டிசம்பர் 30 வரை 0723339740
Redwood Hollow Cabins (Nuwara Eliya) டிசம்பர் 30 வரை 0723339740
35%
Hotel Sudu Araliya (Polonnaruwa) டிசம்பர் 31 வரை 0777860112 0272224849 Credit : 35% Debit : 35%
Tropical Life Resort & Spa (Dambulla) 10 நவம்பர் - டிசம்பர் 31 0662030300 0777225151 Credit : 35% Debit : 35%
up to 40%
Wild Grass Nature Resort டிசம்பர் 31 வரை 0771 788 487 066 493 5577 066 228 6866
up to 35%
STAY at Ahangama டிசம்பர் 31 வரை 0777 353 130 Credit : up to 35% Debit : up to 35%
30%
Anilana Hotels & Resorts (Passikudah) டிசம்பர் 31 வரை 0112030900 0773209041
25%
South Lake Resort (Koggala) டிசம்பர் 31 வரை 0914944500 0766857236
Gedara Villa (Kalutara) டிசம்பர் 31 வரை 0914944500 0766857236
Dream Lodge (Hanthana) till 31st December 0914944500 0766857236
The Other Corner (Habarana) டிசம்பர் 31 வரை 0773 327 995 011 7399500
10%
Lady Hill (Galle) டிசம்பர் 31 வரை 0763609843
Anilana Hotels & Resorts (Nilaveli) 15 நவம்பர் - டிசம்பர் 31 0112030900 0773209041
Birds Park (Polgahawela) டிசம்பர் 31 வரை 0914944500 0766857236
Sathmin Villa (Ahangama) டிசம்பர் 31 வரை 0914944500 0766857236
Villa Indrasiriya (Ahangama) டிசம்பர் 31 வரை 0914944500 0766857236
Cottage 42 (Nuwara Eliya) டிசம்பர் 31 வரை 0914944500 0766857236
citrus
Citrus Waskaduwa
வெள்ளி மற்றும் சனி :
Rs.11,000/- Nett per person-per night on full board double.
Rs.9,000/- Nett per person-per night on full board triple.
ஞாயிறு முதல் வியாழன் :
Rs.10,000/- Nett per person-per night on full board double.
Rs.8,330/- Nett per person-per night on full board triple.
• Children aged 6-11 years : Rs.3,000/- Nett per child. டிசம்பர் 31 வரை
• Reservations – 0775700630 / 0776638179
Citrus Hikkaduwa
வெள்ளி மற்றும் சனி :
Rs.9,000/- Nett per person-per night on full board double.
Rs.7,670/- Nett per person-per night on full board triple.
ஞாயிறு முதல் வியாழன் :
Rs.8,500/- Nett per person-per night on full board double.
Rs.7,330/- Nett per person-per night on full board triple.
• Children aged 6-11 years : Rs.2,500/- Nett per child. டிசம்பர் 31 வரை
• Reservations – 0775700630 / 0776638179 / 0775700624
சுப்பர் மார்க்கெட்
25%
Cargills 25% Discount for Fresh Vegetables / Fruits & Seafood டிசம்பர் 31 வரை (Exclude from 11th to 24th December) Min Bill Value Rs. 2,500/- Max Discount per transaction Rs. 1,000/- Max quantity of 5kg per item
Arpico (At Arpico Supercentre, Superstore & Arpico Daily) 10% off on total bill value நவம்பர் 15 - டிசம்பர் 31 For bills above : Rs.3,000/- Maximum Discount : Rs.1,000/-
10%
Laugfs Super 10% off on total bill டிசம்பர் 5 - 26 Minimum Bill Value Rs.2,500/- Maximum Discount : Rs.1,000/- Maximum quantity per item: 5kg/units
20%
Softlogic Glomark 20% off on total bill value Minimum Total Bill Value - Rs.5,000/- Maximum Bill Value - Rs.10,000/- Maximum Discount - Rs.2,000/- Maximum 3 Units / 3kg per product
Keells 20% off on fresh vegetables, fruits & seafood நவம்பர் 29 வரை For bills above: Rs.3,000/- Maximum Discount per bill : Rs.1,000/-
காலணி & லெதர்
25%
Helanka டிசம்பர் 20 & 21 Credit : 25% Debit : 10%
up to 15%
Skechers (Abans) டிசம்பர் 31 வரை (On Selected Items)
20%
Bata டிசம்பர் 18 - 25 Credit : 20% Debit : 10%
DSI Premier டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
Fila டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
Clarks - DSI டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
15%
DSI டிசம்பர் 29 & 30 Credit : 15% Debit : 10%
20%
Kalbashi Restaurant & Cafe டிசம்பர் 1 - 31 Credit : 20% Debit : 10%
ஆடைகள்
30%
Sunimal's டிசம்பர் 11 & 12 Credit : 30% Debit : 15%
Keyana Department Store டிசம்பர் 11 & 18 Credit : 30% Debit : 20%
Amante டிசம்பர் 15 & 16 Credit : 30% Debit : 10%
The Brands Warehouse டிசம்பர் 8, 9, 10, Credit : 30% Debit : 15%
Saman Mal டிசம்பர் 24, 25, 26 Credit : 30% Debit : 10% (Minimum Bill Value Rs. 3500/-)
The Factory Hub (Nugegoda) டிசம்பர் 25, 26, 30 Credit : 30% Debit : 15%
25%
Cotton Island டிசம்பர் 1 & 2 Credit : 25% Debit : 10%
Mimosa டிசம்பர் 19 - 21 Credit : 25% Debit : 10%
Velona டிசம்பர் 18 & 19 Credit : 25% Debit : 10%
Arista டிசம்பர் 18 & 19 Credit : 25% Debit : 10%
Damro Diliganz டிசம்பர் 16 & 17 Credit : 25% Debit : 10%
Iris டிசம்பர் 16 & 17 Credit : 25% Debit : 10%
The Kids Warehouse டிசம்பர் 20 & 21 Credit : 25% Debit : 15%
Piyarathna Tex டிசம்பர் 23 & 24 Credit : 25% Debit : 10%
Chamathkara நவம்பர் 15 - டிசம்பர் 31 Credit : 25% Debit : 25%
The Vanta studios டிசம்பர் 19 - 21 Credit : 25% Debit : 10%
Double XL டிசம்பர் 6 & 7 Credit : 25% Debit : 15%
Avirate டிசம்பர் 7 & 8 Credit : 25% Debit : 10%
Dilly & Carlo டிசம்பர் 9 & 10 Credit : 25% Debit : 10%
Kreation டிசம்பர் 13 - 19 Credit : 25% Debit : 15%
Saree Mandir டிசம்பர் 10, 11, 12 Credit : 25% Debit : 15%
Chenara Dodge டிசம்பர் 24 & 25 Credit : 25% Debit : 15%
ODEL டிசம்பர் 23 & 24 Credit : 25% Debit : 10%
ODEL SPORTS நவம்பர் 23 & 24 Credit : 25% Debit : 10%
Luv SL நவம்பர் 23 & 24 Credit : 25% Debit : 10%
Sacoor Brothers (ODEL-One Galle Face Mall) நவம்பர் 23 & 24 Credit : 25% Debit : 10%
Cotton Collection டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Galleria டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Levi's டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Calvin Klein டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Tommy Hilfiger டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Armani Exchange டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
GUESS டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Diesel டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Mango டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Charles & Keith டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Aldo டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Nike டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Adidas Originals (One Galle Face Mall) டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Adidas Performance (One Galle Face Mall) டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Skechers (One Galle Face Mall) டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Vero Moda டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Jack & Jones டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Clarks (Colombo City Centre) டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Crocs டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Fossil டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
International Watches டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Mothercare டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
The Toy Store டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Furla டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Luxe Bags டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Carpisa டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Yamamay டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
American Tourister டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Hallmark டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
New Balance டிசம்பர் 2 & 3 Credit : 25% Debit : 10%
Rado டிசம்பர் 2 & 3
Tissot டிசம்பர் 2 & 3
Longines டிசம்பர் 2 & 3
(Check in Store for Promotional Offer)
20%
Cool Planet டிசம்பர் 6 & 13 Credit : 20% Debit : 10%
CIB Shopping Centre டிசம்பர் 18 & 19 Credit : 20% Debit : 10%
Claire's Closet டிசம்பர் 18 & 19 Credit : 20% Debit : 10%
CIB Curtains டிசம்பர் 18 & 19 Credit : 20% Debit : 10%
Wijaya Saree Mandir டிசம்பர் 18 & 19 Credit : 20% Debit : 10%
Wijaya House of Tailors டிசம்பர் 18 & 19 Credit : 20% Debit : 10%
Uptown Kandy டிசம்பர் 26 & 27 Credit : 20% Debit : 10%
Hi Life டிசம்பர் 13 & 14 Credit : 20% Debit : 10%
Haamaa டிசம்பர் 12 & 21 Credit : 20% Debit : 10%
House of Fashions நவம்பர் 27 & டிசம்பர் 11, 19, 22 Credit : 20%
Handloom Gallery டிசம்பர் 9, 10, 15, 16, Credit : 20%
Nirmani Dress Point டிசம்பர் 20 & 21 Credit : 20% Debit : 10%
New Manel டிசம்பர் 18 & 19 Credit : 20% Debit : 10%
Prasad Fashion Square டிசம்பர் 17 & 18 Credit : 20% Debit : 10%
Prasad Textiles டிசம்பர் 17 & 18 Credit : 20% Debit : 10%
Sarathchandra Textiles டிசம்பர் 25 & 26 Credit : 20% Debit : 10%
Shopimo டிசம்பர் 9 & 10 Credit : 20% Debit : 5%
Spring & Summer டிசம்பர் 9 & 10 Credit : 20% Debit : 10%
Super Fashion (Panadura) டிசம்பர் 17 & 18 Credit : 20% Debit : 10%
The Factory Outlet டிசம்பர் 11 & 12 Credit : 20%
GCS Fashions (Polonnaruwa) டிசம்பர் 25 & 26 Credit : 20% Debit : 10%
Galle City Stores (Polonnaruwa) டிசம்பர் 25 & 26 Credit : 20% Debit : 10%
XIMI VOGUE டிசம்பர் 6 & 13 Credit : 20% Debit : 10%
Asics டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
Aurelia டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
Puma டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
Reebok டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
U.S. Polo டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
W டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
RedTape டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
Hameedia டிசம்பர் 7 & 8 Credit : 20%
Signature டிசம்பர் 7 & 8 Credit : 20%
Adidas exclusive (Racecourse mall & KCC) டிசம்பர் 7 & 8 Credit : 20%
Envoy London டிசம்பர் 7 & 8 Credit : 20%
Nick Nack டிசம்பர் 6 & 13 Credit : 20% Debit : 10%
Supul Collection டிசம்பர் 13 & 14 Credit : 20%
Sriyani Dress Point டிசம்பர் 18 & 19 Credit : 20%
Sanu Cool Fashion டிசம்பர் 17 - 19 Credit : 20% Debit : 10%
Sanu City Center டிசம்பர் 17 - 19 Credit : 20% Debit : 10%
Inter Fashion டிசம்பர் 12 & 18 Credit : 20% Debit : 10%
RV Fashion நவம்பர் 27 & டிசம்பர் 18 Credit : 20% Debit : 10%
ZUZI டிசம்பர் 9 & 10 Credit : 20% Debit : 10%
LEVEL OUTFITTERS டிசம்பர் 27 & 28 Credit : 20% Debit : 15%
Midnight Divas டிசம்பர் 29 & 30 Credit : 20%
up to 15%
Hugo Boss டிசம்பர் 31 வரை (On Selected Items)
Under Armour டிசம்பர் 31 வரை (On Selected Items)
ஒன்லைன் கொள்வனவு
20%
dsifootcandy.lk டிசம்பர் 29 & 30 Credit : 20% Debit : 10%
www.vyaya.lk டிசம்பர் 4 & 5 Promo Code : VYPB20 Credit : 20%
hameedia.com டிசம்பர் 7 & 8 Credit : 20%
Softlogic Glomark 20% off on total bill value நவம்பர் 15 - டிசம்பர் 31 Minimum Total Bill Value - Rs.5,000/- Maximum Bill Value - Rs.10,000/- Maximum Discount - Rs.2,000/- Maximum 3 Units / 3kg per product
thevantastudios.com டிசம்பர் 19 - 21 Credit : 25% Debit : 10%
coolplanet.lk டிசம்பர் 6 & 13 Credit : 20% Debit : 10%
springandsummer.lk டிசம்பர் 9 & 10 Credit : 20% Debit : 10%
echannelling.com நவம்பர் 15 - டிசம்பர் 31 Credit : 20%
25%
www.helankashoes.lk டிசம்பர் 20 & 21 Credit : 25% Debit : 10%
mimosaforever.com டிசம்பர் 19 - 21 Credit : 25% Debit : 10%
up to 20%
singer.lk டிசம்பர் 31 வரை (On Selected Items)
up to 17.5%
wasi.lk நவம்பர் 15 - டிசம்பர் 31
15%
atlasmyshop.lk டிசம்பர் 1 - 31 Credit : 15% Debit : 10% LKR 2500 Minimum for free shipping
up to 25%
mysoftlogic.lk டிசம்பர் 31 வரை (On Selected Items)
up to 15%
bigdeals.lk டிசம்பர் 31 வரை (On Selected Items)
quantum.lk டிசம்பர் 31 வரை (On Selected Items)
buyabans.com டிசம்பர் 31 வரை (On Selected Items)
12%
essentials.lk நவம்பர் 20 - டிசம்பர் 25 Credit : 12% Debit : 12%
10%
tudo.lk நவம்பர் 15 - டிசம்பர் 31 Credit : 10% Maximum discount per transaction Rs. 5000/-
daraz.lk டிசம்பர் 31 வரை Credit : 10% Debit : 10%
PickMe டிசம்பர் 31 வரை Save 250LKR on your Food orders & Essentials Minimum order value Rs.1000/- Promo code for PickMe Food - PBFNOV/PBFDEC Promo code for PickMe Market - PBMNOV/PBMDEC Number of transactions PickMe Food - 4 transactions per user per month Number of transactions PickMe Market - 4 transactions per user per month
மருத்துவமனை
50%
Ninewells 50% off on Mammograms
உணவகங்கள்
Buy One Get One Free
Pizza Hut நவம்பர் 15 & டிசம்பர் 6 Credit : Buy 1 get 1 Free
Taco Bell நவம்பர் 17 & டிசம்பர் 7 Credit : Buy 1 get 1 Free
15%
Flower Drum டிசம்பர் 31 வரை Credit : 15% Debit : 15% Bills above Rs.3,500/- (Food Only) & free delivery within city limits
ஆபரணங்கள்
50%
Premadasa Jewellers டிசம்பர் 31 வரை
Fior Drissage Jewellers Ltd டிசம்பர் 31 வரை
up to 40%
Mallika Hemachandra டிசம்பர் 31 வரை Credit : up to 40% Debit : up to 40% (On Selected Items)
up to 30%
Raja Jewellers டிசம்பர் 14 - 16 Credit : up to 30% (On Selected Items)
20%
Chamathka நவம்பர் 15 - டிசம்பர் 31 Credit : 20% Debit : 20%
கடிகாரம்
up to 15%
Titan டிசம்பர் 31 வரை (On Selected Items)
Vasan Hospital
Eye Care
• Free eye check up for card holders and immediate family members.
• 30% off on non-branded Frames and Sunglasses.
• 10% off on branded Frames and Sunglasses.
Dental Care
• Free dental check up for all cardholders and immediate family members.
• 50% off on teeth whitening.
• 10% off on fillings.
ஒப்டீசியன்ஸ்
30%
Wickramarachchi Opticians Free eye testing, Free hearing screening, 30% off on Frames & Sunglasses நவம்பர் 15 - டிசம்பர் 31 (Valid for Credit & Debit cards)
தளபாடங்கள்
up to 15%
Softlogic Furniture டிசம்பர் 31 வரை (On Selected Items)
உடற்தகமை
up to 15%
Quantum Fitness டிசம்பர் 31 வரை (On Selected Items)
கார் கெயார்
up to 35%
Toyota Lanka டிசம்பர் 31 வரை
இலத்திரனியல் சாதனங்கள்
up to 25%
Softlogic / Softlogic Max டிசம்பர் 31 வரை Selected consumer electronics
up to 20%
Singer டிசம்பர் 31 வரை (On Selected Items)
up to 15%
Dinapala டிசம்பர் 31 வரை up to 15% on Selected Brands (Philips/Clear/Wipro/Suga/Fuji) Up to 5% - Other Brands Valid for Credit & Debit Cards
JBL டிசம்பர் 31 வரை (On Selected Items)
up to 30%
Wimaladharma & Sons நவம்பர் 15 - டிசம்பர் 25 (On Selected Items)
இச்சலுகைகள் 31 டிசம்பர் 2021 வரை மட்டுமே
புத்தகம்
up to 20%
Sadeepa Book shop டிசம்பர் 01 - டிசம்பர் 31 (On Selected Items)
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating



# 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி நாட்டை அழிவுப்பாதைக்கே அழைத்துச் செல்லும்

## வேலுகுமார் சபையில் எச்சரிக்கை

(ஆர்.யசி, எம்.ஆர். எம்.வசீம்)

இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையே ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியாகும். இது நாட்டை மோசமான அழிவுப்பாதைக்கே அழைத்துச் செல்லும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவினத் தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாக தெரிவித்து இரசாயன உரத்தை ஒரே இரவில் வர்த்தமானி வெளியிட்டு தடைசெய்தார். பின்னர் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களை உணர்ந்து அந்த வர்த்தமானி அறிவிப்பை வாபஸ் பெற்றுக்கொண்டார். அதேபோன்று நாட்டில் தேர்தல் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரசாயன உரத்துக்கு வர்த்தமானி வெளியிட்டு வாபஸ் பெற்றதைப்போன்று தேர்தல் திருத்தச் சட்டத்தை மேற்கொள்ள முடியாது. அது தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து சிறுபான்மை கட்சிகளின் ஆலோசனைகளை பெற்றே அதனை மேற்கொள்ளவேண்டும். தொகுதிவாரி தேர்தல் முறையை ஏற்படுத்தி சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்கவே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அதேபோன்று ஒரே நாடு ஒரே சட்டம் நாட்டை மோசமான அழிவுப்பாதைக்கே அழைத்துச் செல்லும். கடந்த காலங்களில் இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தியவரிடமே ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் முற்றாக எதிர்க்கின்றார்கள். இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டுமே தவிர இத்தகைய செயற்பாடுகளால் இனங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்படுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் 2009க்கு முன்னர் வடக்கு தெற்கு பிளவுபட்டே இருந்தது. பின்னர் வடக்கு தெற்கை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பூமியை ஒன்றிணைக்க முடிந்தாலும் இன, மத, சமூக ரீதியில் மக்கள் மனதை வெற்றி கொள்ள முடியாது போயுள்ளதை குறிப்பிட வேண்டும். கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இனங்களுக்கிடையே ஒற்றுமையை கட்டியெழுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அந்த அடிப்படையே சீர்குலைந்து பிளவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றார்.




# பெற்றோருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து மூன்று வருடங்களாக சிறுமிமீது வல்லுறவு

## 22 வயது இளைஞன் கம்பளை பொலிஸாரால் கைது

(கம்பளை நிருபர்)

தாய், தந்தையருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து மூன்று வருடங்களுக்கு மேலாக 14 வயது சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி வந்ததாகக் கூறப்படும் 22 வயது இளைஞனை கம்பளை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரை கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநித் விஜேசேகர முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதன்போது கம்பளை ரத்மல கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே சந்தேகத்தின்பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவராவார்.

கடுமையாக ஹெரோயின் பாவனைக்கு அடிமையான மேற்படி சந்தேக நபரின் பாலியல் தொல்லையை தாங்கிக் கொள்ள முடியாது பாதிக்கப்பட்ட சிறுமி அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கில் பேராதனை பிரதேசத்தில் அமைந்துள்ள மகாவலி ஆற்று பாலத்துக்கு மேலிருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளமுயன்ற சந்தர்ப்பத்தில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவரினால் காப்பாற்றப்பட்டு பேராதனை பொலிஸாரிடம் சிறுமி ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பின்னரே குறித்த சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட கம்பளை பொலிஸார் தெரிவித்தனர். மேலும் சந்தேக நபர் சிறுமியின் விடயத்தை வெளியில் சொன்னால் குடும்பத்துடன் கொலை செய்துவிடுவதாக அச்சுறுத்தியதாலேயே மேற்படி சம்பவம் குறித்து பொலிஸாரிடம் முறையிடவில்லையெனவும் மேற்படி சந்தேக நபரின் தொல்லையை தாங்கிக் கொள்ள முடியாததால் இதற்கு முன்னரும் குறித்த சிறுமி சுருக்கிட்டு தற்கொலை செய்ய முயன்றுள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# பதுளையில் 93 பேருக்கு கொவிட்

(பதுளை நிருபர்)

பதுளை மாவட்டத்தில் பசறை, பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை ஆகிய பிரதேசங்களில் நேற்று (24) செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட 'ரெபிட் என்டிஜன்' பரிசோதனையில் 93 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்க பதுளை மாவட்ட உப தலைவர் எஸ். சுதர்சன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அந்த வகையில் பசறையில் 18 பேரும் பதுளையில் 12 பேரும் பண்டாரவளையில் 51 பேரும் அப்புத்தளையில் 12 பேருமாக 93 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனைவரும் அவரவர் வீடுகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறினார்.

# உதவும் கரங்களின் மனிதாபிமான பணி



இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் வாழும் தென் மலையக மக்களின் கல்வி, சமூக, பொருளாதாரத்தை மேம்படுத்தும் முகமாக இரத்தினபுரியை தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு மாவட்டங்கள் கடந்தும் மனிதநேய மக்கள் பணிகளை கடந்த இரண்டு வருட காலமாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் பதுளை, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வாழும் மலையக உறவுகளுக்காக மேற்கொண்டு வருகின்ற மனிதாபிமானப் பணிகளின் வரிசையில் லிந்துலை நாகசேனை பிரதேசத்தில் கடந்த ஒன்றரை வருட காலமாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு நடமாட முடியாதிருக்கும் 74 வயதுடைய சிவனாண்டி கிருஷ்ணன் மற்றும் வட்டவளை லொனாக் தோட்டத்தில் வசிக்கும் 83 வயதுடைய முத்துசாமி மாரிமுத்து ஆகியோருக்கு சக்கர நாற்காலியும் உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை நோர்வூட் மேல் பிரிவில் கடந்த 12வருட காலமாக நோய்வாய்ப்பட்டு நடக்க முடியாதிருக்கும் கணேசன் தனுஷாந்த் (வயது15) சிறுவனுக்கான ஊன்றுகோல், உலர் உணவு பொருட்கள் என்பன அமைப்பின் நிர்வாக குழுவினர் மற்றும் இளைஞர் அணி உறுப்பினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

# 34 வயது மதிக்கத்தக்க நபர் சடலமாக மீட்பு

(கலஹா நிருபர்)

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உனம்புவ பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது. கம்பளை நகரிலிருந்து கல்வெல பகுதிக்கு செல்லும் வழியிலுள்ள கட்டிடமொன்றுக்கு அருகிலிருந்தே சுமார் 34 வயது மதிக்கத்தக்க மேற்படி நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவுவேளையில் இந்நபர் இறந்திருக்கலாம் என கம்பளை பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கொடகே சாகித்திய விருது பெறும் மல்லிகை சி.குமாரின் 'வேடத்தனம்'

மலையகத்தின் மக்கள் எழுத்தாளர் கலாபூஷணம் மல்லிகை சி.குமார் எழுதிய 'வேடத்தனம்' நூல் 23ஆவது கொடகே தேசிய சாகித்திய விருதை பெறவுள்ளது.

2020ஆம் ஆண்டு வெளிவந்த சிறுகதைத் தொகுப்புக்களில் சிறந்த சிறுகதைத் தொகுப்பாக மல்லிகை சி.குமாரின் 'வேடத்தனம்' தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மலையக மண்வாசனை சொட்ட அம்மக்களின் வாழ்வியலை தன் படைப்பிலக்கியத்தின் ஊடாக பறைசாற்றி நின்ற கவிஞர், சிறுகதையாசிரியர், ஓவியர் என பல்பரிமா ணம் கொண்ட மூத்த இலக்கியவாதி, மக்கள் கவிஞர் மல்லிகை சி.குமார் தனது சிறுகதைகள் கவிதைகள் மூலம் மலையக மக்களின் வாழ்க்கையை பதிவு செய்தது மட்டுமின்றி பிழைப்புவாத அரசியலை எள்ளி நகையாடி சமூக விடுதலையை வலியுறுத்தி வந்துள்ளார். அந்தவகையில் அவரது மாடும் வீடும் , மனுஷியம் ஆகிய மக்களுக்கான இலக்கிய படைப்புகள் ஏற்கனவே வெளிவந்த நிலையில், கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இவரது 'வேடத்தனம்' நூல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியீடு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தநிலையில் ஜனவரி மாதம் 27ஆம் திகதி எதிர்பாராத நிலையில் அவர் இயற்கை எய்தினர். இந்நிலையில் அவரது இறுதி நிகழ்வின் போது இந்த 'வேடத்தனம்' சிறுகதை நூல் வெளியீடு செய்யப்பட்டது.

# காணாமல்போன மீனவர்களை மீட்டுத்தாருங்கள்

## உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை



(கல்குடா நிருபர்)

வாழைச்சேனையில் இருந்து செப்டெம்பர் 26ஆம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் இவர்களை மீட்டுத் தருமாறும் குறித்த மீனவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமல்போன மீனவர்களின் உறவினர்கள் நேற்று புதன்கிழமை ஓட்டமாவடி, பாலைநகர் கிராமத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வாழைச்சேனை மீன்பிடி துறைமுறைகத்துக்கு கடந்த மாதம் வருகை தந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலுக்குச் சென்று காணாமல் போனவர்கள் அந்தமான் தீவில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களை மிக விரைவில் மீட்டுத் தருவதாகவும் உறவினர்களிடம் உறுதியளித்த போதும் இன்றுவரை (நேற்று 24) குறித்த மீனவர்கள் வீடு திரும்பவில்லை. கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம், பிரதேச மீனவ சங்கங்கள் இதுவிடயத்தில் அக்கறை காட்டாது அசமந்தப்போக்கில் உள்ளன.

அந்தமான்தீவில் இருந்து 00913192245530, 0115299623 என்ற இலக்கத்தின் மூலம் தொலைபேசி அழைப்பு வந்து, தங்களது உறவினர்கள் தொடர்பில் பெயர் குறிப்பிட்டு விசாரணை செய்தனர். இதன் பின்னர் தொடர்பு இல்லாமல் உள்ளமைக்கான காரணம் என்ன என்று இன்னும் தெரியவில்லை.

அந்தமான்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மீனவர்கள் தற்போது எங்கே? அந்தமான்தீவு கடல் பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது உறவினர்கள் அங்கிருந்து படகுடன் எங்கு கொண்டு செல்லப்பட்டனர்? மீனவர்கள் உள்ளனர் என்றும் பிறகு மீனவர்களின் தகவல் கிடைக்கவில்லை என்றும் அரசாங்கம் எங்களை ஏமாற்றுகின்றதா? அல்லது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பில் கரிசனை கொள்ளாமல் உள்ளாரா?

நான்கு மீனவர்களை நம்பி வாழும் நான்கு குடும்பங்கள் தற்போது பாரிய கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன. இரண்டு மாதங்களாக மற்றையவர்களது உதவி மற்றும் கடன் வாங்கி எங்களது வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். அத்தோடு குழந்தைகள் தந்தையை கேட்டு அழுகின்றனர்.

எனவே கடற்றொழில் அமைச்சர், கடற்றொழில் திணைக்களம், பிரதேச மீனவ சங்கங்கள் இதுவிடயத்தில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இரண்டு மாதங்களாக வீடு திரும்பாத எங்களது உறவினர்களை கண்டுபிடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களது கதைகளை நம்பியே நாங்கள் இரண்டு மாதங்களாக காத்துக்கொண்டிருக்கின்றோம் என்றும் தெரிவித்தனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்தவர்களான எம்.வி.ரிஸ்கான் (வயது 21), எம்.எச். முஹம்மட் கலீல் (வயது 49), ஏ.எம். றியாழ் (வயது 19) மற்றும் கே.எம். ஹைதர் (வயது 41) ஆகியோரே காணாமல் போனவர்களாவர்.

# மக்களின் ஏகோபித்த முடிவின் பிரகாரமே முஷாரப் பட்ஜட்டை ஆதரித்து வாக்களித்தார்

## பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் அப்துல் றஹீம்

(அம்பாறை, அட்டாளைச்சேனை நிருபர்கள்)

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை பொத்துவில் மக்களின் ஏகோபித்த முடிவாகுமென பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச். அப்துல் றஹீம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக மாநாடு பொத்துவில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை, புத்திஜீவிகள், இயங்கும் பட்டதாரிகள் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பொத்துவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்றது. அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்து மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றியுள்ளார். அதில் குற்றம் காண்பது தவறான விடயம். இதனை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமையும் கட்சி உயர் பீடமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

2022 வரவு செலவுத் திட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் ஆதரவளித்தமை பொத்துவில் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

பல தசாப்தங்களாக பொத்துவில் மக்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் தலைவர் ரிஷாத் பதியுதீனுக்கும் வாக்களித்துள்ளனர். எனினும் எங்கள் பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் இதுவரை பெற்றுக் கொடுக்கவில்லை. பொத்துவில் பிரதேசத்து மக்களின் ஏகோபித்த முடிவில் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் களம் இறங்கி வெற்றியும் பெற்றுக்கொண்டார்.

பொத்துவில் மக்கள் பொத்துவிலுக்கான உறுப்பினரை பெற்றுக்கொள்ள முயற்சி செய்தனர். பாராளுமன்ற உறுப்பினரை பெற வெளியூர் மக்களின் பங்களிப்பு அலாதியானது. இம்முறை வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் வாக்களித்ததால் பொத்துவில் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றியுள்ளார்.

எனவே இதனை தவறாக கருதி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் நீக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் இதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

### படகுப்பாதை விபத்து

# கிழக்கு ஆளுநர் பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்கவும்

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(பட்டிருப்பு நிருபர்)

குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் குறித்த சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டு.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பொன்னுத்துரை உதயரூபன் மேலும் தெரிவிக்கையில், குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தில் மாணவர்கள் உட்பட ஆசிரியர் ஒருவரும் பலியானதையிட்டு எமது ஆசிரியர் சங்கம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இந்தச் சம்பவத்துக்கு அரசாங்கம் முழுமையான பொறுப்பை ஏற்க வேண்டும்.

நீர்வழிப் பயணங்களை மாணவர்கள் மேற்கொள்ளும் போது இந்தப் பாதையை சரியான முறையில் சீர்செய்து கொடுத்திருப்பின் அந்த மாணவர்கள் பாதுகாப்பான முறையில் பயணத்தை மேற்கொண்டிருக்கலாம். தற்போது வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற இந்த சூழலில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கிருக்கும் பிரபல்யமான பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய சூழல் இருந்தது. சுபிட்சத்தின் நோக்கு என்று சொல்லி அபிவிருத்தியை நோக்கி இந்த நாடு சென்றுகொண்டிருக்கின்ற நேரத்தில் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கியே இந்த நாடு செல்ல வேண்டும் என்பதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த சம்பவத்துக்கு நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் இது குறித்து நீதியான விசாரணையொன்றை நடத்தி இந்த மாணவர்களுக்குரிய நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகளுக்கு முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்.

# ஜெயசிறிலுக்கு தடையுத்தரவு

(காரைதீவு நிருபர் )

மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்கு காரைதீவு பிரதேச சபைத்தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தடை உத்தரவை நேற்று(24)புதன்கிழமை சம்மாந்துறைப் பொலிஸார் தவிசாளரது இல்லத்துக்குச் சென்று கையளித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று அதிகரித்துவரும்சூழ்நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கவேண்டியிருப்பதனால் இத்தகைய ஒன்றுகூடல் செயற்பாட்டுக்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயலத் நீதிமன்றுக்கு அறிக்கை செய்துள்ளார்.

அதற்கமைய 22ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சம்மாந்துறை நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குட்பட்ட காரைதீவுப் பிரதேசத்தில் இத்தகைய நினைவுகூரல்களை நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.




# குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்து பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம்

## திருமலை மாவட்ட இ.த.க. தலைவர் குகதாசன்

(சேனையூர் நிருபர் )

கிண்ணியா ,குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தில் மாணவர் உள்ளிட்ட அறுவர் உயிரிழந்த சம்பவமானது எம்மை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இந்நிலையில் உயிர் இழந்தோரின் குடும்பங்களுக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம் என திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் ச. குகதாசன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

படகுப்பாதை விபத்துச் சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் அனைவரும் விரைவில் குணமடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இந்த விபத்துப் பற்றிப் பக்கச் சார்பற்ற நேர்மையான விசாரணை நடத்தி இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க உரிய அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் ஆவன செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பயங்கரவாத தடைச்சட்டம், நல்லிணக்கம், மனித உரிமை செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து

# ஐ.நா. உதவிச் செயலருக்கு அமைச்சர் பீரிஸ் விளக்கம்

(எம்.மனோசித்ரா)



பயங்கரவாத தடைச்சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் உட்பட, நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக உள்நாட்டு செயன்முறைகளில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றம் தொடர்பில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளரிடம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் காலித் கியாரி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்து கலந்துரையாடிய போதே இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது தொற்று நோய்க்கு பின்னர் ஏற்பட்ட பொருளாதார சவால்கள் மற்றும் இலங்கையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் உள்ளிட்ட இலங்கையின் கொவிட் தொற்று நோய்க்கு பிந்திய மீட்பு நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் குறித்து அமைச்சர் கலந்துரையாடினார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் உட்பட, நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக உள்நாட்டு செயன்முறைகளில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றத்தை சுட்டிக்காட்டிய அமைச்சர், உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மீள உறுதிப்படுத்தினார்.

இலங்கை தாமதமாக முன்வந்து ஏற்றுக்கொண்ட சர்வதேச கடமைகளுக்கு அமைவாக, நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் அடைந்து கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை தொடர்ந்தும் ஒத்துழைக்கும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

உதவிச் செயலாளர் நாயகம் கியாரியுடன் ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் மற்றும் ஏனைய ஐ.நா. அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்கள் விரும்பினால் 55 வயதில் ஓய்வுபெறலாம்

### அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன்

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

ஜனவரி முதலாம் திகதிக்குப் பிறகு 55 வயதை அடையும் அரச ஊழியர்கள் விரும்பினால் ஓய்வுபெறலாம் என அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தின்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித்த ஹேரத், அரச ஊழியர்கள் ஓய்வுறும் திகதி ஆரம்பிக்கும் தினம் குறித்து கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

விஜித்த ஹேரத் தொடர்ந்து கூறுகையில்,

வரவு செலவு திட்ட உரையில் நிதி அமைச்சர் அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 65வரை அதிகரிப்பதாக அறிவித்திருந்தார். இதனால் அரச ஊழியர்கள் மத்தியில் பாரிய குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. எதிர்வரும் டிசம்பர் மாதம் இறுதியில் பலர் ஓய்வு பெறுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றனர். அதனால் அவ்வாறான அரச ஊழியர்களின் நிலை என்ன? அரசாங்கம் தெரிவித்திருக்கும் ஓய்வுபெறும் வயது அமுலுக்குவரும் திகதி தெரிவிக்கப்படவில்லை. அதனாலும் அரச ஊழியர்கள் குழப்பமடைந்திருக்கின்றனர்.

அத்துடன் ஓய்வூதியர்களின் ஓய்வூதிய சம்பள முரண்பாடு தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகத்துக்கும் இந்த பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் அவர் தற்போது நீதிமன்றம் சென்றிருக்கின்றார். 2வருடமாகியும் அவர்களின் இந்த பிரச்சினைக்கு தீர்வு இல்லை. இதன் காரணமாக நாட்டில் 6 இலட்சத்து 60 ஆயிரம் ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சம்பள முரண்பாட்டை எவ்வாறு தீர்ப்பதென்று அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

மேலும் அரச ஊழியர்களுக்கு வழங்கும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு வாழ்க்கைச் செலவுக்கேற்ப வழங்கவில்லை. நுகர்வோர் பாதுகாப்பு அதிககார சபையின் அறிக்கையின் பிரகாரம் 2014 முதல் இன்றுவரை வாழ்க்கைச்செலவாக அரச ஊழியர்களுக்கு 14ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் மொத்தமாக 21ஆயிரத்து 900ரூபா அரச ஊழியர்களின் வாழ்க்கைச்செலவாக அரசாங்கம் வழங்கவேண்டும். அந்த கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்திடம் எந்த பதிலும் இல்லை என்றார்.

இதற்கு அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் பதிலளிக்கையில், அரச ஊழியர்கள் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதிக்கு பின்னர், 55 வயதுக்கு பிறகு அவர்கள் விரும்பினால் ஓய்வுபெறலாம். 65வயதுவரை இருக்க வேண்டும் என கட்டாயம் இல்லை என்றார்.

# அனைத்து மதங்களையும் பாதுகாப்பது அரசின் பொறுப்பு

### சபையில் பிரதமர் மஹிந்த

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

நாடொன்றில் உண்மையான அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் பொருளாதார அபிவிருத்தி போன்றே ஆன்மிக ரீதியான அபிவிருத்தியும் இடம்பெறவேண்டும். அதேபோன்று நாட்டின் அரசியலமைப்புக்கிணங்க அனைத்து மதங்களுக்கும் பாதுகாப்பு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைநுட்ப, மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் பிரஜைகளை சிறந்த குணாதிசயம் மற்றும் ஒழுக்கமுள்ள பிரஜைகளாக உருவாக்குவதற்கான பொறுப்பு புத்த சாசன, மத அலுவல்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த 2500 வருடங்களாக புத்த சாசனத்தின் உன்னதத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டது போல் எதிர்காலத்திலும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். இலங்கையின் கலாசாரம் மற்றும் ஒழுக்கமுள்ள மக்களை உருவாக்குதல் அதேபோன்று புத்த சாசனத்தை பாதுகாப்பதும் அனைவரதும் தேசிய பொறுப்பாகும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கிணங்க புத்த தர்மத்தை திரிபு படுத்தாமல் பாதுகாப்பது, புத்த சாசனத்தை பாதுகாப்பது, பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை மேம்படுத்துவது, பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எமது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து மதம் தொடர்பான நடவடிக்கைகள் எமது அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க அனைத்து மதங்களையும் பாதுகாப்பது எமது பொறுப்பாகும்.

அதற்கிணங்க அனைத்து மத வழிபாட்டு தலங்களையும் அபிவிருத்தி செய்வது, அனைத்து மதத்தவர்களின் கல்வி மற்றும் நலன்புரி செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மதங்களின் வழிபாட்டுத் தலங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அதேபோன்று ஒழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவதற்கும் பல்வேறு திட்டங்களை புத்த சாசன, மத விவகார, கலாசார அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. நாட்டில் நிலையான அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் பொருளாதார அபிவிருத்தியைப் போன்றே ஆன்மிக ரீதியான அபிவிருத்தியும் அவசியமாகும். மேலும் அறநெறி பாடசாலைகள் கட்டமைப்பை பலப்படுத்துவதற்காக வருடாந்தம் பெருமளவு நிதி ஒதுக்கப்படுவதுடன் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் விவகார திணைக்களங்களின் ஊடாக அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது என்றார்.








*உங்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கான

HNB முதலீட்டு திட்டங்கள்.

உங்களதும் உங்கள் பிள்ளைகளதும் வாழ்க்கை இலக்குகளை அடைவது குறித்து உங்கள் மனதில் இருக்கும் அபிலாஷைகளை நாம் நன்கு அறிவோம். உங்கள் விருப்பம்போல் உங்கள் கனவுகளை நனவாக்கிக்கொள்ளக்கூடிய நிகரில்லா இலகுவான மற்றும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை நாம் உங்களுக்கு வழங்குகிறோம்.

HNB முதலீட்டு திட்டங்கள் மூலம்

* நீங்களே உங்கள் முதலீட்டு வருவாயை தீர்மானிக்கலாம்.
* நீங்களே உங்கள் முதலீட்டு காலத்தை தீர்மானிக்கலாம்.
* நீங்களே உங்கள் முதலீட்டின் மாதாந்த வைப்புத் தொகையினை தீர்மானிக்கலாம்.
* நீங்கள் உங்களின் வைப்புத்தொகையில் 75% இனை கடனாக மீளப்பெறும் வசதி.

* சிறுவர் முதலீட்டு திட்டத்திற்கு ரூ.500 மற்றும் பெரியோர் முதலீட்டு திட்டத்திற்கு ரூ.2000 குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு தொகைகளாகும்.

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி | முதலீட்டுத் திட்டங்கள்

0112 462 462

hnbconnect@hnb.lk facebook.com/hnbplc twitter.com/hnbplc instagram.com/hnbsrilanka

வங்கி நெறிமுறைகளுக்கு உட்பட்டது

பிற்ச் ரேட்டிங் AA-(lka) ஹட்டன் நஷனல் வங்கி என்பது, இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும். ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி - PQ 82

# எங்களுக்கு உரிமை கிடைத்தால்போதும் எனக் கூறுவது ஏற்புடையது அல்ல

## நினைவேந்தல்களை வீடுகளில் அனுஷ்டிக்க முடியும் என்கிறார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(எம்.நியூட்டன்)

எங்களுக்கு உரிமை கிடைத்தால் போதும் அதன் பின்னர் எல்லாம் கிடைக்கும் என சிலர் கூறுகின்றனர். அது ஏற்புடையது அல்ல. ஒரு சமூகத்துக்கு தேவையான அத்தனை துறையிலும் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உழுந்து, பயறு விதை பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் 25 மாவட்டங்களில் உள்ள அத்தனை பிரதேசசெயலகங்கள், கிராமசேவகர்பிரிவுகளுக்கும் வரவு செலவு திட்டத்தில் நிதி சமமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதியை கொண்டு சேர்க்க வேண்டிய பொறு ப்பு வட கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கின்றது.

எங்களுக்கு உரிமை கிடைத்தால் போதும் அதன் பின்னர் எல்லாம் கிடைக்கும் என சிலர் கூறுகின்றனர். ஆனால் வளர்ச்சி என்பது எல்லா வகையிலும் நமக்கு கிடைக்க வேண்டும்.அம்பாறை மாவட்டத்தில் தமிழரின் இருப்பு என்பது கேள்விக்குறியாகி இருக்கின்றது. திருகோணமலையில் ஒரு ஆசனம் தான் கிடைக்கின்றது. இன்னும் சில வருடங்களில் அதுவும் கிடைக்குமா என்பது கேள்விக்குறி.



பேசிக்கொண்டு வெற்று அறிக்கை வெளியிடுவது மட்டும் அரசியல் அல்ல. ஒரு சமூகத்துக்கு தேவையான அத்தனை துறையிலும் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். தூரநோக்குடன் திட்டங்களை வகுக்க வேண்டும். அடுத்த தலைமுறையாவது நல்ல நிலைமையில் இருக்க வேண்டும். போராட்ட அரசியலை நாம் கொச்சைப்படுத்தமாட்டோம். அது உயர்ந்த நோக்கில் இடம்பெற்றது. அடுத்ததாக எதிர்ப்பு அரசியல், நாங்கள் எதை செய்தாலும் எதிர்ப்போம் என்ற அரசியல் காணப்படுகிறது. அதனால் எதையும் சாதிக்க முடியாது.

முள்ளிவாய்க்கால் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் சரியான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. நான் உட்பட 16 பேர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்தோம். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. நீண்டகாலத் தீர்வு விடயங்களிலும் நாம் சாதிக்கவில்லை. அபிவிருத்தி விடயங்களையும் நாம் பெற்றுக்கொடுக்கவில்லை. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதேவேளை நினைவேந்தல் தொடர் பில் நீதிமன்றத் தடையுத்தரவுகள் பெறப்படுகின்றமை குறித்து கேட்டபோது, யுத் தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், இழப் புகளை சந்தித்தவர்கள் சட்டத்துக்கு உட்பட்டு வீடுகளில் நினைவேந்தல்களை அனுஷ்டிக்க முடியும். அவர்களுக்கு நான் இந்த இடத்திலே ஆறுதலை சொல்ல விரும்புகிறேன் என்றார்.

# வவுனியா வைத்தியசாலையில் தாதியர்கள் சுகாதாரப்பிரிவினர் பணிப்பகிஷ்கரிப்பு



ஓமந்தை,

வவுனியா வைத்தியசாலையில் தாதியர்கள், சுகாதார பிரிவினர் மேற்கொண்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

வைத்திய சேவை தவிர்ந்த, தாதியர் உள்ளிட்ட 15 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று முதல் 48 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கின்றன. நேற்று காலை 7 மணி முதல் இரண்டு தினங்களுக்கு இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் தாதியர்கள், மற்றும் ஏனைய சுகாதார பிரிவினர் கடமைக்கு சமுகமளிக்காமையினால் நோயாளிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக நேற்று அதிகாலை தொடக்கம் சீரற்ற காலநிலை காரணமாக பெரும் மழை பெய்துவரும் நிலையில் மழையினையும் பொருட்படுத்தாது தூர இடங்களில் இருந்தும் வைத்தியசாலைக்கு பல்வேறு மருத்துவ தேவைக்காக வந்த நோயாளிகள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க கூடியதாக இருந்தது. இதேவேளை, தாதியர்கள் 7 கோரிக்கைகளை முன்வைத்து இப்பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மன்னாரில் பெய்யும் மழையினால் தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில்

(தலைமன்னார் நிருபர்)

மன்னாரில் நேற்று முன்தினம் முதல் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியதைத் தொடர்ந்து தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மன்னாரில் பெய்துவந்த மழையின் காரணமாக சுமார் ஐயாயிரம் ஏக்கர் புழுதி நெற் செய்கை பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது.

இவற்றை தற்பொழுது கணிப்பீடு செய்வதற்கான முன்னெடுப்புக்களை அதிகாரிகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையில் மீண்டும் மழை பெய்து வருவதால் தற்பொழுது மன்னாரில் 31 ஆயிரம் ஏக்கரில் காலபோக விவசாயத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் பலர் மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமாகிய கட்டுக்கரைக்குளத்தில் தொடர்ந்து இரண்டு அங்குல நீர் வான் பாய்வதாகவும்அகத்திமுறிப்பு குளத்தில் மூன்று அங்குல நீர் வான்



பாய்ந்து வருவதாகவும் மன்னார் மற்றும் வவுனியா நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி யோகராஜா தெரிவித்தார்.

அத்துடன் பல கிராமங்களின் உள்வீதிகள் மற்றும் பலரின் வீடுகளிலும் வீடுகளைச் சுற்றியுள்ள இடங்கள் எல்லாம் வெள்ளக்காடாகவே காட்சி அளிக்கின்றது. மன்னாரில் மழை தொடர்ந்து பெய்யுமானால் பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டியநிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வடக்கு, கிழக்கில் 27 வரை கடும் மழைபெய்யும் சாத்தியம்

### சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா

(எம்.நியூட்டன்)

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் உருவாகியுள்ளதால் வடக்கு, கிழக்கு உட்பட்ட பிரதேசங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருப்பது அவசியமாகும் என யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் காலநிலை அவதானி நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# குளத்தில் தாயுடன் நீராடச்சென்ற சிறுவன் நீரில் மூழ்கி மரணம்

ஓமந்தை,

வவுனியா, பாவற்குளத்திற்கு தாயுடன் நீராடச் சென்ற 4 வயது சிறுவன் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக உளுக்குளம் பொலிசார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் வசித்து வரும் தாய் ஒருவர் தனது பிள்ளைகளுடன் பாவற்குளத்திற்கு நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது 4 வயது சிறுவனை குளத்தில் நீராட விட்டு விட்டு தாய் கரைக்கு வந்து திரும்பி குளத்திற்குள் சென்றபோது நீராடிக் கொண்டிருந்த சிறுவனை காணவில்லை. இதனையடுத்து தாயார் அங்கு நின்றவர்கள் மற்றும் ஊரவரை அழைத்து சிறுவனை தேடிய போது சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டார்.

உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் சிறுவன் மரணமடைந்துள்ளார்.


உ
சிவமயம்

# உத்திரகிரியை பத்திரிகை



அன்புடையீர்!

நிகழும் பிலவ வருடம் ஐப்பசி மாதம் 25ஆம் நாள் 11.11.2021 வியாழக்கிழமை இரவு 10.47 மணியளவில்

திருச்சி மாவட்டம் காவேரிப்பட்டி கிராமம் காலஞ்சென்ற பதுளை கந்தசாமி பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் எங்களின் அன்புத்தாயாருமான திருமதி கமலம் என்கிற

**திருமதி காமாட்சி அம்மாள் அவர்கள்**

இறைவன் திருவடி அடைந்ததை முன்னிட்டு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 10ஆம் நாள் 26.11.2021 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் அந்திசாஸ்திரமும் மறுநாள் 27.11.2021 சனிக்கிழமை காலை பண்டாரவளை, அம்பேத்தன்னை ஆற்றங்கரையில் கருமகாரியமும் நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மகன்மார்**
K.விஸ்வநாதன், K.கோவிந்தராஜ்
அமரர் K.ரவீந்திரன், K.மோகன்ராஜ்

**மருமகள்மார்**
R.விஜயா
M.அம்பிகா

**பேரப்பிள்ளைகள்**
M.கயன், M.உதயகாயத்ரி
R.அபிநயா, R.தக்சிகா

இல.63/6, கோவில் வீதி (Morden Terrace) பண்டாரவளை. 0766302695, 0572228681



# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 12 . 08 . 1938



ஆண்டவன் அடியில் 21 . 11 . 2021

திருமதி

## கமலேஸ்வரி நாகராசா


மட்டக்களப்பு புளியந்தீவைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, கொழும்பு நாரகென்பிட்டி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கமலேஸ்வரி நாகராசா அவர்கள் 21-11-2021 ஞாயிற்றுக் கிழமை அன்று இயற்கை எய்தினார்.அன்னார், காலஞ்சென்ற திரு. திருமதி தியாகராசா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற திரு. திருமதி குணரட்னம் தம்பதிகளின் மருமகளும்,காலஞ்சென்ற நாகராசா (முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், நரேஷ்குமார் (லண்டன்), கோணேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,பத்மாதேவி (லண்டன்), நிருபாதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியும், பவித்திரன், கிரிஷா, நவீஸ்கண்ணா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் 24-11-2021 புதன்கிழமை ஜெயரத்ன மலர்ச்சாலையில் காலை 8.30 முதல் இரவு 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 25.11.2021 இன்று வியாழக்கிழமை காலை 10.30க்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை பொது மயானத்தில் மதியம் 12.30 மணிக்கு தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.தகவல்: குடும்பத்தினர்

நரேஷ்குமார் – மகன் : Mobile : +447900383380
கோணேஸ்வரன் – மகன் : Mobile : +447960165777
பத்மாதேவி – மருமகள் : Mobile : +447917733909



# மரண அறிவித்தல்

மண்ணில் 15 . 02 . 1938



விண்ணில் 24 . 11 . 2021

## திரு சுப்பிரமணியம் நடராசா

யாழ் காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராசா அவர்கள் 24.11.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கோமளவல்லி (பரமேஸ்வரி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புச் சகோதரனும், அற்புதராசா(சுவிஸ்), சற்குணமலர் (வெள்ளவத்தை), சாந்தமலர் (லண்டன்), சண்முகராசா (நீர்கொழும்பு) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், வசந்தபிறேமினி (சுவிஸ்), சேனாதிராசா (லண்டன்), சுகிர்தராசா (லண்டன்), பிருந்தா (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகிலப்பிரியா - ரூபன், தவப்பிரியா, தருணிகா ஆகியோரின் அன்புமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.11.2021 அன்று கொஹுவல இந்து மயானத்தில் இடம்பெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: – குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :-
அற்புதராசா +41754282919 /சேனாதிராசா +447903735925
சற்குணமலர் +94783720953 /சாந்தமலர் +447592506750
சண்முகராசா +94776220193 /சுகிர்தராசா +447934602004


## நகரசபை... (தொடர்ச்சி)

அவரது உறவினரான ரியாஸ் என்ற நபருமேயாவார். ஆகவே ஜனாதிபதி, பிரதமர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இதனை கருத்திற் கொண்டு நகரசபை தலைவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை, அமைச்சரவை அறிவிப்பை முன்வைத்த கிராமிய வீதிகள், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா, கிண்ணியா பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் குறித்து எமது அனுதாபங்களை வெளிப்படுத்தினார். இதன்போது அவர் கூறுகையில், கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப்பாதை கவிழ்ந்ததில் உயிரிழந்த சிறுவர்கள் மற்றும் வயதானவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் எனதும் அரசாங்கத்தினதும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகலரும் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். குறிஞ்சாக்கேணி பகுதியில் மக்கள் நீண்டகாலமாக களப்பை பயன்படுத்திய காரணத்தினால் பாலமொன்று இல்லாத நிலைமையே காணப்பட்டது. பாதுகாப்பில்லாத முறையில் இவர்கள் படகுகளை பயன்படுத்திக்கொண்டனர். அப்பகுதி மக்களின் ஒரே கோரிக்கையாக இருந்ததும் தமக்கு பாலம் ஒன்று வேண்டும் என்பதேயாகும். நல்லாட்சி காலத்திலும் அடிக்கல் நாட்டினாலும் பாலத்தை நிர்மாணிக்க முடியாது போயிருந்தது. தௌபிக் எம்.பி.யும் பாலத்தை புனரமைத்து தருமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார்.

குறித்த பகுதியில் மூன்று பாலங்கள் நிர்மாணிக்க வேண்டியுள்ளன. அதில் ஒரு பாலத்தை புனரமைக்க அடிக்கல் நாட்டினேன். இந்த பாலத்தை முழுமைப்படுத்தும் வரையிலும் மாற்று வீதியை பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபை மாற்றுவீதியை பயன்படுத்தவே அனுமதித்திருந்தது. மாற்றுப்பாதையை மக்கள் பயன்படுத்திக்கொண்டிருந்த நேரத்தில் தான் இந்த படகுப்பாதையை பாவிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கிண்ணியா பிரதேச சபையே இதற்கான அனுமதியை கோரியிருந்தது. ஆனால் படகுப்பாதை பயன்படுத்த வேண்டாம் என தெளிவாக கூறியிருந்தோம். பின்னர் கிண்ணியா நகரசபையும் இதே கோரிக்கையை முன்வைத்தது. அதற்கும் நாம் அனுமதி வழங்கவில்லை. இவ்வாறான நிலையில்தான் கிண்ணியா நகரசபை தமக்கு இல்லாத அதிகாரத்தை பயன்படுத்தி குறுக்கு வழியில் பணத்தை சம்பாதிக்க வியாபாரி ஒருவருக்கு இந்த படகுப்பாதையை அமைக்க அனுமதி வழங்கியுள்ளது என்றார்.

## சமையல்... (தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். எனினும் அதுதொடர்பில் அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருக்கின்றது. அதனால் எரிவாயு சிலிண்டர் வெடித்து உயிரிழப்புகள் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜுபுர் ரஹுமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்றவரவு செலவு திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவினத் தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்த அவர் சதொச நிறுவனத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூடு மோசடி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தியதனால் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக பதவி விலகிய நுகர்வோர் விவகார நடவடிக்கைகள் அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் துஷான்குணவர்த்தன சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை வைத்திருக்கின்றார். அதாவது, எல்.பி. 12.5 காஸ் சிலிண்டரில் கலவை செய்யவேண்டிய அளவு மாற்றப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். காஸ் சிலிண்டரில் இருக்கவேண்டிய பிரபோனின் அளவு 20வீதமும் டீடன் அளவு 80வீதமுமாக இருக்க வேண்டும்.

ஆனால் இன்று அந்த காஸ் சிலிண்டரில் இருக்க வேண்டிய கலவையின் அளவில்மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. பிரபோன் மற்றும் டீடன் 50வீதமாகமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் நுகர்வோர் சூறையாடப்படுகின்றனர். இந்நடவடிக்கையால் காஸ் விரைவாக தீர்ந்துவிடும். 30நாட்களுக்குபாவிக்கும் காஸ் சிலிண்டரை 20 நாட்களுக்கே பாவிக்க முடியுமாகின்றது இதுபாரிய கொள்ளையாகும் என துஷான் குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார் என்றார்.

## ஜேர்மன்... (தொடர்ச்சி)

முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவின் தலைவர்கள் நேற்று மேற்கொண்டிருந்தனர். கொழும்பில் உயர்ஸ்தானிகரகத்தில் இச்சந்திப்பு நடை பெற்றது. இதில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம் எம்.பி. மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள், ஐ.நா. வின் 46/1 பிரேரணை, பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படல், ஜி.எஸ்.பி. வரிச் சலுகைகள், தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் காணி அபகரிப்பு, இனப்பரம்பல் சிதைப்பு என்பவற்றை தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ.நா. பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நிறைவேற்றுவது தொடர்பாகவும் மாகாணசபை தேர்தல்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. தமிழர்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புக்களை வலியுறுத்துவது, அதன் முக்கியத்துவம், அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்றம், ஆதரவு தரப்புக்கள், எதிர்கால நகர்வுகள் என்பன பற்றியும் ரெலோ தரப்பால் விளக்கம் அளிக்கப்பட்டது.

### அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான

# ஐ.நா. விசேட அறிக்கையாளர் நாளை இலங்கை வருகிறார்

(நா.தனுஜா)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுநாளையதினம்இலங்கைவரும்அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருப்பார்.

இக்காலப்பகுதில் ஆடை உற்பத்திக் கைத்தொழில், தேயிலைப் பயிர்ச்செய்கை, சுற்றுலாத்துறை உள்ளடங்கலாகப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் தொழிலாளர்களின் நிலை தொடர்பில் அவர் ஆய்வுகளை மேற்கொள்வதுடன் தொழிலாளர்கள் தொடர்பான சட்டம் மற்றும் கொள்கைகளின் அமுலாக்கம் குறித்தும் மதிப்பீடுகளை மேற்கொள்வார்.

'நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பூர்த்திசெய்யப்படவேண்டிய, இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் தொடர்பான முன்னேற்றகரமான நகர்வுகள் குறித்து அறிந்துகொள்வதற்கு நான் பெரிதும் விரும்புகின்றேன்' என்று ரொமோயா ஒபொகாடா தெரிவித்துள்ளார்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நபர்களை வலுக்கட்டாயமாகத் தொழிலில் ஈடுபடுத்துவதை முடிவுக்குக்கொண்டுவரல், நவீனகால அடிமைத்துவம் மற்றும் ஆட்கடத்தல் ஆகியவற்றை இல்லாதொழித்தல், சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுத்தல் மற்றும் இல்லாதொழித்தல் ஆகியவை பூர்த்தி செய்யப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு மார்ச் 14 முதல் சாட்சி விசாரணைகள்

### முறைப்பாடு செய்த அசாத் சாலி உள்ளிட்டோருக்கு சாட்சி வழங்க ஆஜராகுமாறு அறிவித்தல்

(எம்.எப்.எம்.பஸீர்)

இனங்களுக்கு இடையே, நல்லிணக்கத்தை பாதிக்கும் விதமாக கருத்து வெளியிட்டமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள, ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவரும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலருமான கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிரான சாட்சி விசாரணைகளை எதிர்வரும் 2022 மார்ச் 14 ஆம் திகதி ஆரம்பிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இது குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. குற்றம் சாட்டப்பட்டுள்ள, கலகொட அத்தே ஞானசார தேரர் இதன்போது மன்றில் ஆஜரானார்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில் கொழும்பில் ஊடக சந்திப்பொன்றினை நடத்தி, நல்லிணக்கத்தை பாதிக்கும் விதமான வெறுப்பூட்டும் கருத்துக்களை வெளியிட்டதாக ஞானசார தேரர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இடம்பெற்ற விசாரணைகளை மையப்படுத்தி மேல் நீதிமன்றில் ஞானசார தேரருக்கு எதிராக சட்ட மா அதிபரால் இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு அது கையளிக்கப்பட்டுள்ள நிலையிலேயே நேற்று அவ்வழக்கு விசாரணைக்கு வந்திருந்தது.

# 23 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று புதன்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 23 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14205 ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 11 ஆண்களும் 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 18 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

மேலும் நேற்று மாலைவரை 518 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இது வரையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 559 378 ஆக உயர்வடைந்துள்ளது. இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 527 929 பேர் குணமடைந்துள்ளனர். 17 244 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




# கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின் அபிவிருத்தி பணிகளை ஆரம்பிக்கும் சீனா

(எம்.மனோசித்ரா)

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் முழுமையாக இயக்கப்படும் முனையமான கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்காக, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அக்ஷன் இன்ஜினியரிங் கம்பனி மற்றும் சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனி லிமிடட்ட் கூட்டு வணிகத்திற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் இரண்டாம் கட்டத்தின் சிவில் வேலைகளுக்காக சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், 03 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த விலைமுறிகள் தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய குறித்த ஒப்பந்தம் அக்ஷன் இன்ஜினியரிங் கம்பனி மற்றும் சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனி லிமிட்டட் கூட்டு வணிகத்திற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## தலையில்.. (தொடர்ச்சி)

சந்தர்ப்பங்களிலும் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறான செயற்பாடு களின் மூலம் அவர்களும் இந்த தாக்குதல்களுடன் தொடர்புபட்டுள்ளனரா என்ற சந்தேகம் எழுவதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நாட்டில் தற்போது பாரதூரமான தொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. தலையில் மருடத்தைப் போன்ற ஒன்றை அணிந்திருப்பது நாடகங்களில் நடிப்பதற்காகவோ அல்லது வேடிக்கைக்காகவோ அல்ல. நாம் அதனை அணிவதானின் மக்களின் சுமைகளை தாங்க வேண்டும். அவர்களின் துன்பங்களை நீக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் பொறுப்பை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பேராயர் தெரிவித்தார்.

புனரமைக்கப்பட்ட புனித வாதுவ தேவாலயத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் மூலம் நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்துவதில் சில குழுக்கள் ஈடுபட்டதாக தெரிகிறது. இது தொடர்பில் ஆணைக்குழு அறிக்கையின் ஊடாக சில விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலோட்டமாக வெளிப்படும் விடயங்களை விட , இதன் பல விடயங்கள் காணப்படுவதை நாம் உணர்ந்து கொண்டிருக்கின்றோம். அதற்கு பல காரணங்கள் உள்ளன. எமக்கு யாரையும் பழிவாங்க வேண்டிய தேவை கிடையாது. யார் மீதும் கோபம் கிடையாது. எனினும் எமக்கு உண்மை தெரிந்தாக வேண்டும்.

269 பேர் உயிரிழந்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு ஆராதனைகளில் பங்குபற்றி வீட்டுக்குச் செல்ல தேவாலயத்துக்கு வருகை தந்தவர்களுக்கே இந்த சோகம் இடம்பெற்றது. சிலர் தமது குடும்பத்தை இழந்துள்ளனர். மேலும் பலர் வாழ் நாள் முழுவதும் குணப்படுத்த முடியாதளவுக்கு அங்கவீனமடைந்துள்ளனர். இவர்களின் மனங்களில் உள்ள வேதனையை வார்த்தைகளால் கூற முடியாது. அதனை இலகுவாகக் கடந்து செல்லவும் முடியாது.

இந்த வேதனையை போக்குவதற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொண்டவர்கள் யார்? , அதற்கான காரணம் என்ன? என்பவற்றின் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதனை கண்டறியும் வரை நாம் எமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை. இந்த பணியை முடிக்கும் வரை அனைவரையும் ஒன்றாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.இல்லையெனில் நமது தியாகம் பயனற்றதாகும். நாம் நம் உயிரைப் பணயம் வைத்து மக்களை நேசிக்க வேண்டும். அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதிலிருந்து நாம் தப்ப முடியாது. எனவே, இந்த முயற்சியில் ஒன்றுபட்ட ஆதரவுக்காக அருட் தந்தையர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## பட்ஜட்டுக்கு... (தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமைத் தவிர அக்கட்சியின் ஏனைய மூவரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.வரவு செலவுத்திட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பது என்று கட்சியின் அரசியல் உயர் பீடக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த கூட்டத்தில் சுகவீனம் எனக்கூறி பங்குபற்றாத இந்த மூன்று எம்.பி.க்களும் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.மற்றொரு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான தௌபீக் அன்றைய தினம் வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்கவில்லை. இந்நிலையில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தநிலையிலேயே மூவரையும் கட்சியிலிருந்து இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதிய... (தொடர்ச்சி)

நாமே உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் சமித கினிகே தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் தற்போது கொவிட் பரவல் அதிகரித்துள்ளமையின் காரணமாகவே இம்மாவட்டங்களில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 3 ஆம் கட்ட தடுப்பூசி வழங்கல் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தொற்று நோயியல் நிபுணர் சமித கினிகே தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்கள் ஒன்று கூடல்கள் அதிகரித்துள்ளமையே கொவிட் தொற்று மீண்டும் அதிகரிக்கக் காரணமாகும். கிராம பகுதிகளிலேயே இவ்வாறு அதிகரிப்பு இனங் காணப்பட்டுள்ளது. இதே நிலைமை தொடர்ந்தால் மீண்டும் முடக்கத்துக்கே செல்ல வேண்டியேற்படும். நாட்டில் 16 வயதுக்கு மேற்பட்டோர் சனத்தொகை 16.2 மில்லியனாகும். இவர்களில் 15.8 மில்லியன் பேருக்கு முதற்கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அதாவது 98 சதவீதமானோருக்கு முதற்கட்ட தடுப்பூசியும் 84 சதவீதமானோருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது. தடுப்பூசி வழங்கும் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டாலும் சுகாதார விதிமுறைகளை முறையாகக் பின்பற்றாவிட்டால் தடுப்பூசி மூலமான முழுப் பயனையும் பெற முடியாது. தற்போது கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே தான் இந்த மாவட்டங்களில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 3 ஆம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இனிவரும் காலங்களில் புதிய வைரஸ் பிறழ்வுகள் உருவாகினால் அவை ஆரம்பத்தில் இனங் காணப்பட்ட பிறழ்வுகளை விட அபாயமிக்கவையாகவே காணப்படும். வைரஸ் காரணமாக தொற்று நிலைமை ஏற்படும் போது புதிய பிறழ்வுகள் தோற்றம் பெறுவது இயல்பாகும். அவற்றை யாராலும் தவிர்க்க முடியாது. அவை மருந்துவ சேவைக்கு அப்பாற்பட்டவையாகும். எனவே இவற்றிலிருந்து ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்றார்.

## இரசாயன... (தொடர்ச்சி)

அனுமதி வழங்கப்படும். அதற்கமைய இரசாயன உர இறக்குமதிக்கு தடை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படுவதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். இது குறித்த புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் இரசாயன உரப் பாவனைக்காக அரசாங்கத்தினால் எவ்வித சலுகைகளும் வழங்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

பசுமை விவசாயத்தை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இரசாயன உர இறக்குமதியை தடை செய்து கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இந்த தீர்மானத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதிலும் சேதன உரத்தைப் பயன்படுத்தி 6 இலட்சத்து 50 000 ஹெக்டயரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் மக்களின் நலனுக்கு முக்கியத்துவமளிக்கும் அரசாங்கம் என்ற ரீதியில் இரசாயன உர இறக்குமதிக்காக தடை நீக்கி அதுகுறித்த வர்த்தமானி அறிவித்தலையும் இரத்துச்செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இன்று முதல் (நேற்று முதல்) தனியார் துறையினருக்கு இரசாயன உரத்தை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

எனினும் அரசாங்கத்தின் பசுமை விவசாய கொள்கையின் எவ்வித மாற்றமும் இல்லை என்பதால் அரசாங்கத்தினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரசாயன உரம் இறக்குமதி செய்யப்படமாட்டாது. இரசாயன உரத்தை உபயோகிப்பவர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படமாட்டாது.

உரத்தட்டுப்பாடு மாத்திரமின்றி அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக நெல் மற்றும் மரக்கறி உள்ளிட்ட பல பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. தமது விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் நஷ்டமடைந்துள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் உரிய நஷ்ட ஈடு வழங்கப்படும். உரத்தட்டுப்பாடு ஏற்பட்டமையின் காரணமாக பிரபாகரன் மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை விடவும் எனக்கு எதிராக எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன. அரசாங்கத்திலுள்ளவர்கள் கூட இந்த தீர்மானத்துக்கு ஆதரவளிக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும். எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தின் பசுமை விவசாய கொள்கையில் எவ்வித மாற்றமும் கிடையாது என்றார்.

## தேசிய... (தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன ,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைனுட்ப ,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலைவிவாதத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில், எமது தேசத்தின் விடுதலைக்காக முப்பது ஆண்டுகள் ஆயுதமேந்தி போராடியிருந்த எமது தேசத்தின் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் காலத்திலே போதைப்பொருள் வியாபாரம் இடம்பெற்றதாக அப்பட்டமான பொய்யை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டிருந்தார். இதனை வன்மையாக கண்டிப்பதுடன் முற்றாக நிராகரிக்கின்றேன் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் சித்தா அரம்பேபோல: இந்த உயரிய சபையில் பயங்கரவாதி ஒருவரை தேசியத் தலைவராக சித்தரித்து பேசுகின்றார். நீங்கள் ஒரு தமிழ் உறுப்பினர் என்ற வகையில் கஜேந்திரன் எம்.பி. கூறிய விடயங்கள் விளங்காது இருந்திருக்கலாம். ஆகவே ஹன்சார்ட் பதிவில் இருந்து இந்த வாக்கியங்களை நீக்குங்கள் என்றார்.

இதன்போது சபையை வழிநடத்திக் கொண்டிருந்த வேலுகுமார் எம்.பி. : மதிப்பிற்குரிய இராஜாங்க அமைச்சர் அவர்களே, குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தில் என்னால் தலையிட முடியாது. குறுக்கிடவும் முடியாது. எனினும் உங்களின் கோரிக்கையை சபாநாயகரிடம் நான் கொண்டு சேர்க்கின்றேன் என்றார்.

எனினும் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சபையை வழிநடத்திய வேலுகுமார் எம்.பி.யுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய ஆளுந்தரப்பு உறுப்பினர் முஹம்மட் முசம்மில் எம்.பி. கூறுகையில்: விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடைசெய்யப்பட்ட இயக்கமாகும். இந்த நாட்டில் இலட்சக்கணக்கான மக்களை கொலை செய்த ஒருவரை வீரராக்கி இந்த சபையில் பேச முடியாது. குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து மக்கள் மத்தியில் வைராக்கியத்தை பரப்பும் செயற்பாடாகும். இதனை சபைக்குள் கொண்டுவர அனுமதிக்க முடியாது. ஆகவே தயவுசெய்து அவரது உரையை ஹன்சார்ட் பதிவில் இருந்து அகற்றுங்கள். அவருக்கு விரும்பிய அனைத்தையும் சபையில் கூற முடியாது.

வேலுகுமார் எம்.பி.: உங்களின் முறைப்பாடுகளை சபாநாயகரிடம் அறிவிக்கின்றேன்.

முஹம்மட் முசம்மில் எம்.பி. : இப்போது சபாபீடத்தில் நீங்கள்தான் உள்ளீர்கள். சபாநாயகர் இங்கு வந்து உரையை ஹன்சார்ட் பதிவில் இருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான அதிகாரம் உங்களுக்கும் உள்ளது. ஆகவே உரையை நீக்குங்கள் என்றார்.

வேலுகுமார் எம்.பி.: என்னால் சபாநாயகருக்கு முறையிட மட்டுமே முடியும். எனது அதிகாரப் பரப்புக்குட்பட்ட விடயங்களையே என்னால் செய்ய முடியும் என்றார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் : இந்த சபையில் பல்வேறு கருத்துக்கள் உள்வாங்கப்படுகின்றன. ஒரு சிலரது கருத்துக்களை சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் அதனை நிராகரிக்க முடியாது. பல்வேறு சமூகத்தின் பிரதிநிதிகளாக இங்கு பலர் உள்ளனர். ஒரு உறுப்பினர் அவரது நிலைப்பாட்டை முன்வைக்கின்ற நிலையில் அந்தக் குரலை மௌனிக்க இடமளிக்க கூடாது. பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு அவரது கருத்து பிடிக்கவில்லை என்பதற்காக அவரது குரலை மௌனிக்க செய்யக் கூடாது என்பதை கேட்டுக்கொள்கின்றேன்.

இதன்போது தொடர்ச்சியாக ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஆளுந்தரப்பு பின்வரிசை உறுப்பினர்கள் : வரப்பிரசாதங்களை தடுக்ககூடாது. அதேபோல் வரப்பிரசாதங்களை பயன்படுத்தி பயங்கரவாத தலைவர் ஒருவரை தேசிய தலைவராக நிறுவுவதற்கு சபையை வழிநடத்தும் நீங்கள் இடமளிக்க வேண்டாம். பிரபாகரனை நெல்சன் மண்டேலா, மகாத்மா காந்தியுடன் ஒப்பிடவே இவர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால் பிரபாகரன் ஒரு கொலைகாரன், பயங்கரவாதி. இதனை விளங்கிக்கொள்ள வேண்டும் என்றனர்.

இதற்கு பதில் தெரிவித்த வேலுகுமார் எம்.பி. : நீங்கள் முன்வைக்கும் காரணிகளை சபாநாயகரிடம் கூறி அவரது உரையில் சர்ச்சைக்குரிய விடயங்களை ஹன்சார்ட் அறிக்கையில் இருந்து நீக்குவது குறித்த கோரிக்கையை சபாநாயகரிடத்தில் அறிவிக்கின்றேன். எனக்குள்ள அதிகார எல்லைக்குள் என்னால் என்ன செய்ய முடியுமோ அதனையே முன்னெடுக்க முடியும் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய முசம்மில் எம்.பி. மற்றும் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள், தான் சபையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி பேசிய விடயங்கள் காணொளிப்பதிவில் ஒலி நிறுத்தப்பட்டுள்ளது. நீங்கள் திட்டமிட்டே இதனை செய்கின்றீர்கள் என்றனர். எனினும் அதனை பொருட்படுத்தாது வேலுகுமார் எம்.பி. சபையை நெருக்கடிக்கு மத்தியில் வழிநடத்தினார்.

எனினும் தொடர்ச்சியாக ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் வேலு குமார் எம்.பியை கடுமையாக விமர்சித்து அழுத்தம் கொடுத்ததுடன் கஜேந்திரன் எம்.பியையும் திட்டித்தீர்த்தனர். எனினும் குழப்பங்களுக்கு மத்தியிலும் உரையாற்றிய கஜேந்திரன் எம்.பியின் உரையின் பின்னர் உரையாற்றிய ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கஜேந்திரன் எம்.பியை விமர்சித்து உரையாற்றினர்.

## மோசமடையும்... (தொடர்ச்சி)

அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

இவ்வாண்டின் முதல் ஆறுமாதகாலப்பகுதியில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மிகவும் மோசமடைந்துள்ளது. இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில், மனித உரிமைகள் நிலைவரம் மிகமோசமடைந்து செல்வதைத் தெளிவாகப் புலப்படுத்தும் அதேவேளை எதிர்கால மீறல்கள் குறித்த அச்சுறுத்தலை வெளிப்படுத்தும் வகையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆழமான கரிசனை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அதனையடுத்து இலங்கையில் மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் விசனத்தை வெளிப்படுத்தியும் கடந்த காலங்களில் இடம்பெற்ற அனைத்து விதமான மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பாதுகாப்புத்தரப்பினரால் தொடர் கண்காணிப்புக்கு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டதுடன் பயங்கரவாதத்தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தன்னிச்சையான கைதுகளும் இடம்பெற்றன. அதுமாத்திரமன்றி கைதுசெய்யப்பட்ட நபர்களை நீதிமன்ற மேற்பார்வையின்றி புனர்வாழ்வளித்தல் நிலையங்களுக்கு அனுப்புவதற்கான அதிகாரத்தை வழங்கக்கூடியவாறான புதிய வழிகாட்டல்களும் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டன.

மேலும் மரணதண்டனைக் கைதியொருவர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்பட்டதுடன் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் போன்ற சுயாதீன கட்டமைப்புக்களுக்குப் பொறுப்பாக 'சர்ச்சைக்குரிய' நபர்கள் நியமிக்கப்பட்டனர். அதோடு மிகமுக்கிய சில மனித உரிமைகள் வழக்குகள் தொடர்பான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் இடையூறுகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டன. பொலிஸ்காவலின் கீழ் சில மரணங்கள் பதிவானதுடன் அவற்றை 'சட்டத்துக்கு முரணான படுகொலைகள்' என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி தமிழ் மற்றும் முஸ்லிம் நலனோம்பு அமைப்புக்கள் உள்ளடங்கலாக சில அமைப்புக்கள் தடைசெய்யப்பட்டமை மற்றும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நினைவுகூரல் நிகழ்வுகளை நடத்துவதற்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை உள்ளடங்கலாக சிறுபான்மையினரை ஒதுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தன .

## நிரந்தர... (தொடர்ச்சி)

இருப்பதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச்செயலாளர் டொனால்ட் லூ, இலங்கையிலிருந்து சென்ற எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான ஜனாதிபதி சட்டத்தரணி கனகசுஸ்வரன் மற்றும் கலாநிதி நிர்மலா சந்திரஹாசன் ஆகியோர் அடங்கிய சட்டநிபுணர் குழு கடந்த 13 ஆம் திகதி அமெரிக்கா பயணமானது.

தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலான அரசியலமைப்பு உருவாக்கம் பற்றிய கலந்துரையாடல்களை முன்னெடுக்கும் நோக்கில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இக்குழுவினருடன் உலகத்தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழுவும் இணைந்து கடந்த வாரம் முதல் அந்நாட்டின் உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகின்றன.

அதன் ஒரு அங்கமாக எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான குழுவினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருப்பதுடன் நிகழ்நிலை ஊடாக இணைந்துகொண்ட பணியகத்தின் உதவிச்செயலாளர் டொனால்ட் லூவுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

'இலங்கையில் நல்லிணக்கத்தை நிலைநாட்டுதல் தொடர்பில் கலந்துரையாடும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத்தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, மனித உரிமைகளே இலங்கையுடனான அமெரிக்க வெளியுறவுக்கொள்கையின் அடிப்படையாகக் காணப்படுகின்றது என்பதை உதவிச்செயலாளர் டொனால்ட் லூ அடிக்கோடிட்டுக் காட்டினார். நிலைபேறான சமாதானத்தை அடைந்துகொள்வதற்கான தேடலிலும் அவர்களது நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்வதிலும் இலங்கைத் தமிழ் மக்களுடன் அமெரிக்காவும் இணைந்துகொள்வதுடன் அதற்காகக் குரல்கொடுக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இக்குழுவினர் வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு பேரவையின் உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பில் ஈடுபட்டமை உலகத் தமிழர் பேரவையின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இச்சந்திப்பின்போது இலங்கையில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிநிலைநாட்டப்படுவதை உறுதிசெய்யும் அதேவேளை, அரசியல் தீர்வை அடைந்துகொள்வதில் அமெரிக்காவின் வகிபாகம் மற்றும் அதனை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

சுமந்திரன் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் ஏற்கனவே வெள்ளை மாளிகை வெளிவிவகாரக்குழுவின் உயர்மட்ட அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நிகழ்த்தியிருந்ததுடன் இனநல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாகாணசபை... (தொடர்ச்சி)

எம்மை குறைகூறி வருகின்றது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு சபைக்கு சமர்ப்பித்தால் அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் 2வருடங்களுக்கு பிற்போட நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் உண்மை நிலை என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை செய்திருக்காவிட்டால், நாட்டில் தற்போது இருக்கும் பொருட்களின் விலை அதிகரிப்பினால் அரச ஊழியர்கள் பிச்சை எடுக்கவேண்டிய நிலையே இருந்திருக்கும். அரசாங்கத்தின் தவறுகளை சமூகவலைத்தளங்களில் விமர்சிக்கும் அரச ஊழியர்களுக்கு தண்டனை வழங்கும் சுற்று நிருபத்தை அரசாங்கம் வாபஸ்பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன ,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைனுட்ப ,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள்,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கம் இரசாயன உரத்தை தடைசெய்து விவசாயிகளை 6 மாதங்களுக்கும் அதிக காலம் பாதிக்கச்செய்து, விவசாய உற்பத்திகளை வீழ்ச்சியடையச்செய்த பின்னர் இரசாயன உரத்தை தடைசெய்து விடுக்கப்பட்டிருந்த வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் பின்வாங்க எடுத்திருக்கின்றது. இது அரசாங்கத்தின் இயலாத்தன்மையையே காட்டுக்கின்றது. விவசாயிகளுக்கு ஆதரவளித்து நாங்கள் போராட்டம் ஒன்றை செய்தோம். அந்த போராட்டம் செய்து 7 நாட்களில் அரசாங்கம் வர்த்தமானி அறிவிப்பை மீளப் பெற்றுக்கொண்டிருக்கின்றது. இது எங்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

மேலும் நிதி அமைச்சர் அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமை என தெரிவித்து, அரச சேவையை அகௌரவப்படுத்தி இருக்கின்றார். மலேசியா போன்ற நாடுகளின் நிர்வாக சேவையில் எமது நாட்டைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகளே பணிபுரிகின்றனர். எமது நாட்டில் நிர்வாக சேவையில் சாதாரண இராணுவத்தினரையும் அரசியல் இலாபத்துக்கும் ஆட்சேர்ப்பு செய்து அரச சேவையின் கௌரவத்தை இல்லாமல் செய்திருக்கின்றது. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாக வாக்குறுதியளித்து அதனை நிறைவேற்றியது. வரலாற்றில் அரச ஊழியர்களுக்கு இந்தளவு சம்பள அதிகரிப்பு வழங்கியது எமது அரசாங்கத்திலாகும்.

நல்லாட்சி அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு செய்திருக்காவிட்டால், நாட்டில் தற்போது இருக்கும் எரிவாயு விலை, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பினால் அரச ஊழியர்கள் பிச்சை எடுக்கவேண்டிய நிலையே ஏற்பட்டிருக்கும். அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்காக அன்று நாங்கள் 250மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் ஒதுக்கி இருந்தோம். என்றாலும் கடந்த தேர்தலில் இந்த அரசாங்கத்தை அமைப்பதற்காக 80வீதமான அரச ஊழியர்கள் வாக்களித்திருந்தனர். அதனால் நாங்கள் அதிகரித்த சம்பளத்தின் பெறுமதியை அரச ஊழியர்கள் இழந்துவருகின்றனர். பொருட்களின் விலை அதிகரிப்பால் வாழ்க்கையை கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

சமூக வலைத்தளங்கள் ஊடாக அரச சேவையை விமர்சித்தால் அரச ஊழியர்கள் தண்டிக்கப்படுவார்கள் என அரசாங்கம் சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. இராணுவ அதிகாரி ஒருவரை செயலாளராக நியமித்து இதனை அரசாங்கம் செய்துவருகின்றது. அரசாங்கத்தின் தவறுகளை விமர்சிப்பதற்கு அரச ஊழியர்களுக்கு உரிமை இல்லையா என கேட்கின்றேன். இது அரச ஊழியர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல். இந்த நடவடிக்கை சிவில் நிர்வாகத்தில் இருந்து இராணுவ ஆட்சிக்கு செல்வதற்கா வழிவகுக்கின்றது என கேட்கின்றேன்.அதனால் தயவுசெய்து அந்த சுற்று நிருபத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாகாணசபைத் தேர்தலுக்கு செல்ல அரசாங்கம் பயப்படுகின்றது. மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதாக தெரிவித்தே ஆட்சிக்கு வந்த அரசாங்கம், 2வருடமாகியும் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் எம்மை குறைகூறி வருகின்றது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு சபைக்கு சமர்ப்பித்தால் அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்..அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் 2வருடங்களுக்கு பிற்போட நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் உண்மை நிலை என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்றார்.

## கிண்ணியா... (தொடர்ச்சி)

பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த படகுப் பாலத்தின் உரிமையாளர், படகுப் பாலத்தை செலுத்துபவர் ஆகியோர் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையானதையடுத்து கைது செய்யப் பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து குறித்த படகுப் பாதையில் பயணக் கட்டணம் அறவிடும் நபரும் கிண்ணியா பொலிஸா ரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் 35, 40 மற்றும் 53 வயதுகளையுடைய கிண்ணியா பிரதே சத்தைச் சேர்ந்தவர்களாவர். குறித்த சந்தேக நபர்கள் நேற்றைய தினம் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டுள்ளதோடு கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 3 மற்றும் 8 வயதுக் கிடைப்பட்ட சிறுவர்கள் நால்வர், 32 வயதுடைய பெண் மற்றும் 70 வயதுடைய முதியவர் ஒருவர் ஆகியோர் உள்ளடங்கு கின்றனர். இவர்கள் அனைவரும் குறிஞ்சாக் கேணி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். அத்தோடு காயமடைந்த 18 பேர் கிண்ணியா, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோருடன் பயணித்த படகுப்பாதை கவிழ்ந்ததில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த தாயும் அவரது இரு குழந் தைகளும் பிறிதொரு குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளும் முதியவர் ஒருவரும் உயிரிழந்தனர். சம்பவத்தையடுத்து பிரதேச மக்களால் கிண்ணியா பிரதேச செயலகத் துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப்பட்டதோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எம். எச்.தௌபீக்கினுடைய வீட்டின்மீது தாக் குதலும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அங்கு அமைதியற்ற நிலையும் உருவானது.

இரு சந்தர்ப்பங்களில் குறித்த பகுதி யில் பாலம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப் பட்டபோதிலும் பாலம் அமைக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் விபத்துக்குள்ளான படகுப்பாதை பயணிப்பதற்கு கிண்ணியா நகரசபையே அனுமதி வழங்கியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.


### புதிய மாணவர் அனுமதி – 2022
### அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா - الجامعة الغوثية
228/4 ஹில் வீதி, தெஹிவளை.

சுன்னத் வல்ஜமாஅத் கொள்கை அடிப்படையில் இயங்கும் எமது அரபுக் கலாபீடத்துக்கு ஹிப்ழு பிரிவிலும், கிதாபு பிரிவிலும் 2022 இல் மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் கலாபீட பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

தகைமைகள் - ஹிப்ழு பிரிவு

- குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்திருத்தல் வேண்டும்
- தரம் 06 க்கு சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்
- 13 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்

தகைமைகள் - கிதாபுப் பிரிவு

- குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்திருத்தல் வேண்டும்
- தரம் 09 க்கு சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்
- 16 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்

நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28.11.2021, ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும். தகுதியுள்ள மாணவர்கள் தரம் 6/ தரம் 9 சித்தியடைந்ததை அத்தாட்சிப்படுத்தும் பாடசாலை அதிபரின் கடிதத்துடனும் தமது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்துடனும் நேரடியாக நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தெரிவுசெய்யப்படும் இரு பிரிவு மாணவர்களும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கும் அதன் பின்னர் உயர்தரப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கான பொதுக்கல்விக் கற்பித்தலும் இடம்பெறும்.


அனுகூலங்கள்:

- தகுதியும் அனுபவமும் வாய்ந்த உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிபெற்ற விரிவுரையாளர்கள்
- நேர்த்தியான வகுப்பறை வசதிகள்
- சகல வசதிகளும் கொண்ட மாணவர் தங்குமிடத்திற்கான பல மாடிக் கட்டடத்தொகுதிகள்
- மாணவர்களின் மேலதிக தேடலுக்கான சகலவசதிகளும் கொண்ட நூலகம்
- மாணவர்களின் மேலதிக தொடர்பாடல் கற்கைக்கான கணனிப் பாடநெறி
- Spoken English பாட மேலதிக வகுப்புகள்

**குறிப்பு:**
நேர்முகப்பரீட்சாத்திகள் அனைவரும் எமது கலாசாலையில் பட்டம் பெற்ற ஆலிம் ஒருவரின் அல்லது தங்களது பிரதேசத்தில் உள்ள சுன்னது வல்ஜமாஅத் கொள்கை சார்ந்த ஆலிம் ஒருவரின் கையெழுத்திடப்பட்ட பரிந்துரைக் கடிதம் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி பரிந்துரைக் கடிதம் பரிந்துரை வழங்கும் ஆலிமின் முகவரி, தொலைபேசி இலக்கம், பட்டம் பெற்ற கலாசாலையின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டு கடித உறையில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு
அதிபர்,
அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா,
தெஹிவளை
தொ.இ. 0112730153.


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் திரு. கருப்பையா பிள்ளை

**New Nirmaal Trades**

No.80, 4th Cross Street, Colombo -11.

**மறைவு: 23.11.2021**

திரு.க.மதியழகன் இல.80. நிவ் நிர்மால் டிரேடஸ் உரிமையாளர் அவர்களின் அன்பு தந்தையான **அமரர் திரு.கருப்பையாபிள்ளை** அவர்களின் மறைவிற்கும். அன்னாரது பிரிவின் துயரால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இங்ஙனம்.*

**நிவ் நிர்மால் டிரேடஸ்**
**ஊழியர்கள்**

# வீரகேசரி சிறுவிளம்பரங்கள்

**தேவை**

ரோல்ஸ், சமோசா போடுவதற்கு ஆட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் அழைக்கவும். 20 வயதுக்கு உட்பட்ட Boys and Girls உடன் தேவை. கஷ்டமான குடும்பத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (ஜா-எல கந்தானை) சம்பளம் - 20,000/= - 80,000/= வரை. தொடர்புகளுக்கு : 076 6383858

**வாடகைக்கு**

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு (Attached Bathroom) 1500/= முதல். ராமகிருஷ்ணா பெற் றோல் செட் அருகில். 077 7967878

**தேவை**

புறக்கோட்டை, மாத்தறை பத்கடைக்கு ரொட்டி, ரைஸ், அப்பம் போடுவதற்கு பாஸ் ஒருவர் தேவை. நாளொன்றுக்கு ரூ.2000/=. தொடர்பு: 078 8215003

**தேவை**

Wanted Sales Boys and Girls and Field worker with Bike Licences. Contact - 077 9046514, 075 2221150, 011 2472666. Address: Independent Trading Company, No.51, 1st Cross Street, Colombo - 11

**ஜோதிடம்**

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

**தேவை**

பெக்கிங் வேலைக்கு ஆண்/ பெண் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. நாள் சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 8672816, 075 3270182, 0764217228, 072 8684986

**தேவை**

ஹோமாகம, பனாகொடை Templeburg industrial இல் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனமொன்றுக்கு பயிற்சியுள்ள / பயிற்சியற்ற பணியாளர்கள் உற்பத்தி பிரிவுக்கு தேவை. 18 - 32 வயதுக் குட்பட்டவர், சிறந்த சம்பளம் மற்றும் சலுகைகள். தொடர்புகளுக்கு - 077 8869803

**வாடகைக்கு**

வெள்ளவத்தையில் நாள் கிழமை வாடகைக்கு மாடி வீடுகள் உண்டு. சகல வசதிகளும் கொண்டது. பாதுகாப்பானது. 077 2105957, 0777 388860, 011 2055308

**சேவை**

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? கவலையை விடுங்கள் நாங்கள் மீட்டு சந்தைப் பெறுமதி அவ்விடத்திலேயே தரப்படும். 077 6151283

**சேவை**

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

**தேவை**

பேலியகொட மற்றும் ஒருகொடவத்தையில் அமைந்துள்ள எமது நிறுவனங்களிற்கு 18 - 45 வயதிற்கிடைப்பட்ட தொழிற்சாலை உதவியாளர்கள் தேவை. காலை மற்றும் பகல் உணவு இலவசம். ரூ.40,000/= இற்கு அதிகமான சம்பளம். 0777 314955, 076 6908943

**தேவை**

Wanted Part-time Accounts & Correspondence clerk (9.30am - 12.30pm). Minimum G.C.E. O/L with good knowledge of English and computer literacy. Must be resident in Colombo or suburb. Previous work experience an advantage. Please send your Bio-data to Email:- unifoods@sltnet.lk or mail to Orient Trading Company, 95, 2nd Floor, Galle Road, Colombo - 04.

**வாடகைக்கு**

வெள்ளவத்தை டெல்மன் Hospital அருகில் வசதியான இடத்தில் டைல் பதித்த அறைகள் அட்டாஜ் பாத்ரூம் உடன் நாள் வாடகைக்குண்டு. 076 9659679, 071 2625405

**தேவை**

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள மருந்தகத்திற்கு (Pharmacy) மருந்தக அனுபவம் மிக்க ஒருவர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 077 7799533, 077 1629870

**தேவை**

பத்தரமுல்ல உணவகமொன்றுக்கு 35 வயதிற்கு குறைந்த காசாளர் தேவை. 077 3409108, 077 7340748

**தேவை**

பத்தரமுல்ல உணவகமொன்றுக்கு ப்ரைட் ரைஸ், சென்விச், பர்கர் போடுவதற்கு கோக்கிமார் மற்றும் அனுபவமுள்ளவர்கள் தேவை. 077 3409108, 077 7340748

**தேவை**

பஸ்யால பிரதேசத்தில் உள்ள முட்டை உற்பத்தி செய்யும் பாம்க்கு ஆண்/ பெண் வயது 30 - 55 வரை அடிப்படை சம்பளம் 35,000/= மேல். மேலதிக தகவல்களுக்கு: 077 7355722, 071 1442816




**வீடு/ காணி விற்பனைக்கு**

தெஹிவளை Marine Drive இல் Barracuda Restaurant முன்பாக அழகிய கடல் முகப்புடன் 6 ஆம் மாடியில் 2 படுக்கையறைகள், 1 குளியலறை, 2 Lifts, Gym சகல வீட்டு உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Shegar: 077 1434343. விலை - 19.5 மில்லியன்

**வாடகைக்கு**

Full Seaview 1, 2, 3 படுக்கையறைகள் நாள், கிழமை, மாத, வருட வாடகைக்கு. Full Furnished, சமையலறை உபகரணங்கள், Washing Machine, Fridge, Hot Water, Private Car Park, Security. தொடர்பு: Euro Homes Shiva 077 1434343





## சீட்டுக்கட்டுபோல் மளமளவென சரிந்த விக்கெட்டுக்கள்

# தோல்விப் பிடியில் விண்டீஸ்

இலங்கையுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 522 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தோல்வியின் பிடியில் நின்றுகொண்டு ஆடிவருகின்றது.

காலியில் நடைபெற்றுவரும் இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் ஆடிய இலங்கை அணி 386 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதனையடுத்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய நாள் வரை விளையாடி 230 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனையடுத்து 156 ஓட்டங்கள் முன்னிலை பெற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆட களமிறங்கிய இலங்கை 191 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்திருந்த போது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் திமுத் 83, மெத்தியூஸ் 69 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து இலங்கை நிர்ணயித்த 348 ஓட்டங்கள் வெற்றி இலக்கைத் துரத்தக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ரமேஷ் மெண்டிஸ் மற்றும் எம்புல்தெனிய ஆகியோரின் பந்துவீச்சில் சரிந்தது. 18 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்தது.

அதன்பிறகு பொனேர் மற்றும் ஜோஷுவா ஜோடி மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக்கொள்ள, விண்டிஸ் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

பந்துவீச்சில் மிரட்டிய ரமேஷ் மெண்டிஸ் 4, லசித் எம்புல்தெனிய 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆட்டத்தின் கடைசி நாள் இன்றாகும்.

Powered by
CDB
Your Friend

## கவனம் ஈர்க்கும் கருணாரத்ன



இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன தனது அபாரமான தொடர் துடுப்பாட்டத்தினால் கிரிக்கெட் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன 147 ஓட்டங்களை எடுத்தார். 2ஆவது இன்னிங்ஸில் 83 ஓட்டங்களைப் பெற்றார். இதன்மூலம் கடந்த 6 இன்னிங்ஸிலும் அரைச்சதமெடுத்து அதிக ஓட்டங்களைக் குவித்து வருகிறார்.

மார்ச் மாதம் முதல் இதுவரை டெஸ்டில் விளையாடிய 6 இன்னிங்ஸில் ஒரு இரட்டைச் சதமும் 2 சதங்களும் 3 அரைச் சதங்களும் எடுத்துள்ளார்.

## லங்கா பிரிமியர் லீக்கிற்கு அனுசரணை வழங்கும் டயலொக்




2021ஆம் ஆண்டுக்கான லங்கா பிரிமியர் லீக் போட்டித்தொடரின் உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பு பங்காளர் என்ற ரீதியில் போட்டித் தொடருக்கு டயலொக் ஆசிஆட்டா அனுசரணை வழங்குகின்றது.

'எல்.பி.எல்' தொடரானது உலகம் முழுவதிலுமுள்ள சிறந்த திறமையாளர்களை வெளிப்படுத்துவதுடன் இலங்கையின் வளரும் கிரிக்கெட் வீரர்கள் தமது திறமைகளை நிரூபிப்பதற்கான சிறந்ததொரு களமாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடர் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## மக்கள் வங்கியின் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டையுடன் பண்டிகைக் காலத்தில் விஷேட அனுகூலங்கள்

**மக்கள் வங்கி** இப்பண்டிகைக் காலத்தில் பீபள்ஸ் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டை உரிமையாளர்களுக்கு விஷேட விலைக்கழிவுகள் பலவற்றை வழங்குகின்றது. அதனடிப்படையில் பண்டிகைக்காலம் முழுவதும் நாட்டில் முன்னணிவகிக்கும் ஹோட்டல்கள், வாடிவீடுகள் மற்றும் பேக்கரிகளில் போலவே மோட்டார் வாகன சேவை, சுகாதார சேவை, உடற்பயிற்சி நிலையங்கள், சுப்பர் மார்க்கட்களில் பொருட்களை கொள்வனவு செய்திடும் போதும், புத்தகங்கள், ஆடைகள், சப்பாத்துக்கள், தோல் பொருட்கள் கொள்வனவு செய்திடவும், இலக்ரோனிக் மற்றும் மின்சார சாதனங்கள் கொள்வனவு செய்திட, தங்க நகைகள், கடிகாரங்கள், கண் மற்றும் செவிப்புலன் சார்ந்த உபகரணங்கள் கொள்வனவு செய்திடும் போதும் 60% வரையான விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ள பீபள்ஸ் அட்டை உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் 40 மாதங்கள் வரையான வட்டியற்ற இலகு கொடுப்பனவு முறைகளும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. மேலும் மக்கள் வங்கியின் அட்டையினை பாவித்து தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது விஷேட விலைக்கழிவுகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் (கொடுப்பனவு மற்றும் டிஜிட்டல்) கே.பீ. ராஜபக்ஷ அவர்கள் மக்கள் வங்கி எப்பொழுதும் போலவே இப்பண்டிகைக் காலத்தில் பீபள்ஸ் அட்டைகளுக்கான விலைக்கழிவுகள் மற்றும் அனுகூலங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. நீங்கள் செல்லுமிடமெல்லாம் எடுத்துச்செல்ல வேண்டிய, உங்கள் கொடுக்கல் வாங்கல்களை எளிதாக்கிடும் பீபள்ஸ் கிரெடிட் அல்லது டெபிட் அட்டையை இன்னும் நீங்கள் பெற்றுக் கொள்ள வில்லையெனின் அருகிலுள்ள மக்கள் வங்கி கிளையில் பெற்றுக் கொண்டு இப்பண்டிகைக் காலத்தில் விஷேட அனுகூலங்கள் பலவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் மக்கள் வங்கி மனதார வரவேற்கின்றது." என்றார்.

மக்கள் வங்கியின் VISA மற்றும் Master Card Classic, Gold, Platinum, Signature, Infinite World ஆகிய அட்டைகளின் இந்த கவர்ச்சிகரமான விலைக்கழிவுகள் மற்றும் சலுகைகளை டிசம்பர் 31ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியும். எவ்வித ஒப்பந்தக் கட்டணங்கள் மற்றும் வருடாந்தக் கட்டணமும் இன்றி நிலையான வைப்புக்களுக்காக பெற்றுக் கொண்ட கிரெடிட் அட்டைகளுக்காக மிகக்குறைந்த வட்டி வீதமான 12% இனை மக்கள் வங்கி வழங்குகின்றது.



கே.பீ. ராஜபக்ஷ
சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர்
(கொடுப்பனவு மற்றும் டிஜிட்டல்)

வாடிக்கையாளர்களுக்கு மிகவும் குறைந்த வட்டி வீதத்தினை வழங்குவதுடன் மிகக்குறைந்த கொடுப்பனவு முறைகளையும் மக்கள் வங்கியின் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டைகள் வழங்குகின்றன. இது இந்த பண்டிகைக்காலத்தில் மட்டுமல்லாது ஆண்டு முழுவதும் உங்களது வாழ்க்கை முறையை இலகுவாக்கிட உதவுகிறது. நாடு முழுவதும் உள்ள மக்கள் வங்கியின் 741 கிளைகளையும் சேவை நிலையங்களையும் கொண்ட வலையமைப்பின் ஊடாகவும், People's Wave மற்றும் People's Pay மொபைல் வங்கி சேவை அப்பின் மூலமும், People's Web இணைய வங்கிச் சேவை மற்றும் 250க்கும் அதிகமான சுய வங்கிச் சேவை அலகின் ஊடாகவும் மிகவும் சுதந்திரமாக எவ்வேளையும் இவ்வட்டைகளுக்கான கொடுப்பனவுகளை செய்திட முடியும்.

வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்லும் வாடிக்கையாளர்களுக்கு உலகம் முழுவதும் உள்ள 30 மில்லியன் விற்பனை நிலையங்கள் மற்றும் பெருமளவிலான தேசிய நிறுவனங்களில் தங்கள் அட்டைகளைப் பாவிக்கக் கூடியதாக இருக்கின்றமை சிறப்பம்சம் ஆகும். இச்சலுகை தொடர்பான மேலதிக தகவல்களை 1961 என்ற மக்கள் வங்கியின் உடனடி அழைப்பு; எண்ணுக்கு அழைத்து அறிந்து கொள்ள முடியும் அல்லது www.peoplesbank.lk என்ற இணைய தளத்துக்கு பிரவேசிப்பதன் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும்.

## ஐரோப்பாவில் கொரோனா வைரஸால் உயிரிழப்புகள் மார்ச்சுக்குள் 7 இலட்சத்தால் அதிகரிக்கும் அபாயம்

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஐரோப்பாவில் கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் தற்போது நிலவும் போக்கு தொடரும் பட்சத்தில் அந்தக் கண்டத்தில் இந்தக் குளிர் காலத்தில் அந்த வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்கள் தொகை 2.2 மில்லியனாக உயரும் அபாயம் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இதன் பிரகாரம் ஐரோப்பா கண்டத்தில் ஏற்கனவே வைரஸ் தொற்றால் உயிரிழந்த 1.5 மில்லியன் பேருக்கு மேலதிகமாக எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்குள் மேலும் 7 இலட்சம் பேர் இறக்கக் கூடும் என உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது. எனினும் தடுப்பூசி மருந்து ஏற்றுவது தொடர்பில் நாடுகளுக்கிடையே வேறுபாடு நிலவுகிறது.

போர்த்துக்கல்லில் 86.7 சதவீதமான மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ள நிலையில் பல்கேரியாவில் 24.2 சதவீத மக்களுக்கு மட்டுமே முழுமையாக தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் கொவிட்-19 கொரோனா வைரஸால் 51 இலட்சத்து 87 ஆயிரத்து 366 பேர் பலியானதுடன் 25 கோடியே 92 இலட்சத்து 34 ஆயிரத்து 355 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதேசமயம் தொற்றுக்குள்ளானவர்களில் 23 கோடியே 45 இலட்சத்து 75 ஆயிரத்து 50 பேர் குணமடைந்துள்ளனர்.

உலகச் செய்திகள்

## சுவீடனின் முதலாவது பெண் பிரதமர் தெரிவு



சுவீடன் பாராளுமன்றமானது அந்நாட்டின் முதலாவது பெண் பிரதமராக மக்டலெனா அன்டர்ஸனை தெரிவு செய்துள்ளது.

தற்போது நிதி அமைச்சராக பணியாற்றும் அன்டர்ஸன் (54 வயது) நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் தோல்வியைத் தழுவியிருந்த போதும், பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் அவருக்கு எதிராக வாக்களிக்கவில்லை என்ற ஒரே காரணத்தால் சுவீடன் விதிப் பிரகாரம் அவர் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## 50 மில்லியன் பீப்பா எண்ணெய்யை விடுவிக்கவுள்ள அமெரிக்கா



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எரிபொருள் செலவினங்களைக் குறைக்க உதவுவதற்காக நாட்டில் எதிர்பாராத நிலைமைகளில் பயன்படுத்துவதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எண்ணெயில் 50 மில்லியன் பீப்பா எண்ணெயை விடுவிக்க உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய பிரதான எரிபொருள் பாவனை நாடுகளான சீனா, இந்தியா, பிரித்தானியா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளுடன் ஒருங்கிணைந்து எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் குறித்து அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

"இன்று நாம் எண்ணெய் விலை உயர்வைத் தணிவிக்கும் வகையில் உலகளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்படவுள்ள பிரதான முயற்சியொன்றை ஆரம்பித்துள்ளோம்" என ஜோ பைடன் கூறினார். இதன் விளைவாக எரிவாயு விலை வீழ்ச்சியடைவதை காணக் கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார். மேற்படி எண்ணெயை விடுவிக்கும் செயற்கிரமம் எதிர்வரும் டிசம்பர் மாத மத்தியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஈரானில் படுகொலையாளிக்கு மரணதண்டனை



ஈரானில் 17 வயது சிறுவனாக இருந்த போது தனது காதலியை படுகொலை செய்த நபரொருவருக்கு நேற்று புதன்கிழமை மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அர்மான் அப்டோலாலி (தற்போது 25 வயது) என்ற மேற்படி நபர் 2014 ஆம் ஆண்டில் காஸலெஹ் ஷகூர் என்ற தனது காதலியை படுகொலை செய்துள்ளார்.

சிறுவனாக இருந்தபோது அந்நபரால் மேற்கொள்ளப்பட்ட குற்றத்திற்காக அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதற்கு மனித உரிமைகள் குழுக்கள் எதிர்ப்புத் தெரிவித்து அந்தத் தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்த அழைப்பு விடுத்திருந்த நிலையிலேயே மேற்படி தண்டனை நிறைவேற்றம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காஸலெஹின் குடும்பத்தினர் அப்டோலாலிக்கு மன்னிப்பு வழங்க மறுத்ததையடுத்து அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கத்திற்குப் பகுதியாக உடைமையான தஸ்னிம் செய்தி முகவர் நிலையம் அறிக்கையிட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 23 |
| 04 | 11 |
| 1952 | 2021 |



### திருமதி.யோகேஸ்வரி லோகேந்திரன்

கரவெட்டி, நவிண்டிலை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. யோகேஸ்வரி லோகேந்திரன் 23.11.2021 அன்று சிவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்பிள்ளை கந்தையா, அன்னம்மா கந்தையா ஆகியோரின் அன்பு மகளும், திரு.இராஜநாதன் லோகேந்திரனின் அன்பு மனைவியும், வைத்தியர். பிரசன்னா வருண் லோகேந்திரன், திருமதி. அனுஷலா ஜனனி மதிசுதன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி. (வைத்தியர்) ருக்ஷா பிரசன்னா வருண், திரு.பரம்சோதிநாதன் மதிசுதன் (Quantity Surveyor, Qatar), ஆகியோரின் மாமியாரும், ராகவர்தினி பிரசன்னா வருண், ராகவி மதிசுதன் ஆகியோரின் அன்புப் பாட்டியும், மகேஷ்வரி இராஜலிங்கம் (Singapore), காலஞ்சென்ற கணேஷ்வரன் கந்தையா, யோகேஷ்வரன் கந்தையா, ஞானேஸ்வரி கந்தையா, ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25.11.2021 வியாழக்கிழமையன்று காலை 9.00 மணியிலிருந்து ஜெயரட்ண மலர்ச்சாலையில அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 1.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்

**இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

தொடர்புகளுக்கு: பிரசன்னா 0779411366
அனுஷலா 0777433947

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Thursday, November 25, 2021